மகிழ்ச்சி

PUBLIC LIBRARY
2 JUL 1955
MADRAS

Rajam
SVK

அ 4 ணா

நந்தன தை இதழ்.

நேயர்களின் புகைப்படப் போட்டி.

பரிசு பெற்ற படம்.

ஊருணி நீரும்

உழைப்பாளிகள் செயலும்!



போட்டோ: A. கந்தசாமி - நாமக்கல்

பிரசுரத் தேர்வுபெற்ற படம்.

இயற்கையும் செயற்கையும்!

பெங்களூர் கண்ணாடி பங்களாவும், அதன் முன் வான் முகிலைக் கொஞ்சி தழுவிநிற்கும் இரு நெடுமரங்களும்.

போட்டோ: இரா. நாகராசன் - மதுரை,

(முதலிடம் பெறும் படத்திற்கு ரூபாய் ஒன்று பரிசு வழங்கப்படும்.)

விருதுநகர்
சென்ட்ரலில்
14—1—53 முதல்
குதூகல ஆரம்பம்

வேலைக்காரி
மகள்

என். டி. ராமராவ்,
லக்ஷ்மிராஜ்யம்,
ரேலங்கி, சாந்தகுமாரி
மற்றும் பலர் நடித்தது

விருதுநகர்
ஸ்ரீ ராதாவில்
விரைவில் வருகிறது

அஞ்சலி பிக்சர்ஸ்
"பூங்கோதை"

அஞ்சலிதேவி,
நாகேஸ்வர ராவ்,
சிவாஜி கணேசன்,
பண்டரிபாய் நடித்தது

அடுத்து வர இருப்பது!
AVM செல்லப்பிள்ளை

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்
ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1984—தை 1.
ஆண்டு 4] 14-1-53 [மாதம் 8

பொருளடக்கம்

பொங்கல் பிரதிக்ஞை! 3
நாங்கள் கண்ட தர்மம் 6
முள்—தொடர்கதை 9
எனது ஒருநாள் ஆசை
கார்டுப் போட்டி 14
அறிவுப் பூங்கா 16
படித்தவள் 17
சுவைப் பெண்கள் 22
மங்களத்தின் மகிழ்ச்சி 23
தெறித்த முத்துக்கள் 29
ஆடிப் பண்டிகை 31
சந்தேகம் ஒழிக 34
53ம் 84ம் வருக! வருக! 37
நிகழ்ந்த சம்பவம்! 38
பிரியமுள்ள கணவருக்கு 45
இது நிஜமா? 47
வனிதையர் வாழ்க்கையில்
வழுக்கி விழுவதேன்?
கட்டுரைப் போட்டி 49
'பணம்' விமர்சனம் 51
ஞா. சோ. போட்டி 10 53
நேயர் தபால் 55

கதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

எங்கள்

தனுஷ்கோடி விலாஸ் சுருட்டுகளை
எல்லோரும் விரும்புவது ஏன்?

★ உயர்ந்த புகையிலை! ★ சிறந்த பக்குவம்!
★ உயர்ந்த தினுசு! ★ குடித்தவுடன் உற்சாகம்!
★ காரம், மணம், குணம், நீரும்தன்மையுள்ளது!
★ கைதேர்ந்த ஆட்களின் வேலை!

தேவைக்கு எழுதினால் எங்கள் லாரி மூலம்
சப்ளை செய்கிறோம்.

தனுஷ்கோடி விலாஸ் சுருட்டுத் தொழிற்சாலை,
விருதுநகர்.

பிராஞ்சு: அருப்புக்கோட்டை.

பொங்கல் பிரதிக்ஞை!

தமிழரின் தனிப்பெரும் திருநாளாகிய தைப்பொங்கல் நன்னாள் இன்று! உழுது பயிரிட்டு, உதிரத்தை வியர்வையாகச் சிந்தி, கடும் உழைப்பிற்கிடையே தாங்கள்பெற்ற கதிர்மணிகளை வீடு கொணர்ந்து, அப்புது மணிகளால் பொங்கல் இட்டு, மனைவி மக்களுடன் மகிழ்ந்து உண்டு, புத்தாடை அணிந்து களிக்கும் ஒப்பற்றஉழவர்பெருநாள்! அனுச்சாரமும், அர்த்தமற்ற சடங்குகளும், ஆண்டவனின் தரகர்கள் ஈடுபாடுமற்ற இயற்கை வழிபாடுகளுடன் இயைந்த இன்ப நாள்! இப்புனித நாளில் அன்பர்கள் அனைவருக்கும் 'மகிழ்ச்சி' தனது வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்ளுகிறது.

உலக ஆண்டு 1952லிருந்து 1953க்கு 14நாட்களுக்குமுன் மாறி இருக்கும் இவ்வேளையில், வள்ளுவராண்டு 1983லிருந்து 1984க்குப் புரண்டிருக்கும் இன்றையதினத்தில் 'மகிழ்ச்சி' சமீபத்தில் நடந்த, நடந்துகொண்டிருக்கும் சில இன்றியமையாத நிகழ்ச்சிகளை தமிழர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறது

பெரும் சோதனைக்கிடையே இரு புத்தாண்டுகள் மலர்ந்துள்ளன தமிழருக்கு. பருவ மழையின்றி பரிதவிக்கும் விவசாயிகள்—பாடுபட்டும் பலனின்றி பதறித் திரியும் பாட்டாளிகள்—வேலை செய்ய முன்வந்தும் வேலையின்றித் தவித்து வீடுவீடாக குடும்பத்துடன் கையேந்தித்திரியும் கைத்தறி நெசவுச் சகோதரர்கள்—இயற்கையின் விளைவால், புயலின் கொடுமையால் பாதிக்கப்பட்டு உடமை இழந்து கொடுமைக்குள்ளான மக்கள்—இப்படிப் பலவகைகளில் இடர்படாத மக்களே இல்லை என்று கூறும்படி எண்ணற்ற இன்னல்களுக்கிடையில் பிறந்துள்ளன புத்தாண்டுகள்.

இதுமட்டுமல்ல, தமிழர் அனைவரின் கவனத்தைக்கவரும் அரசியல் நிகழ்ச்சிகள் வேறு. பிரிந்துபோக விரும்பும் ஆந்திரரின் ஆத்திரபுத்திக்குள் சிக்கிய தமிழரின் தலைநகரான சென்னை, சித்தூர்ஜில்லாவில் தமிழர் அதிகமாகவாழும் பகுதிகள் பிரச்சனை.

முதலில் சொல்லிய கஷ்டங்களை நிவர்த்தி செய்வதில் சிறிது தாமதம்வேண்டுமானால் ஏற்படுமேதவிர தவிர்க்க முடியாததொன்றில்லை. ஆனால் பின் சொல்லிய அரசியல் பிரச்சனை அப்படியல்ல. தமிழருக்குப் பெரும் சோதனைக்குரிய விஷயம். கட்சி பேதங்களால் தனித்து நிற்கும் தமிழர்களுக்கு ஒரு சவால்!

ஆனால், பிறத்தியார்சொத்துமீது பேராசை கொண்டு விடுத்த இந்த ஆந்திரர்களின் சவாலை ஏற்று நம் தமிழ்நாட்டுத் தலைவர்கள், தலைநகர் விஷயத்தில் கட்சிகளை ஒதுக்கி, ஒன்றுபட்டு வேலைசெய்யத் துவங்கியுள்ளது கண்டு மகிழ்ச்சி கொண்டாலும், காரியம் முடியுமட்டும் கண்ணில் விளக்கெண்ணெயைஊற்றிக் கொண்டு இருக்கவேண்டும். அதற்கு ஒவ்வொரு தமிழ்மகனும் தலைவர்களை உற்சாகம் ஊட்டும்வண்ணம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டேஇருக்கவேண்டும். இது தான் நமது இப்புத்தாண்டின் முக்கிய வேலையாக, முதல் காரியமாக இருக்கட்டும். பொட்டி ஸ்ரீராமுலு போன்று உயிர்த் தியாகம் செய்ய வேண்டியதில்லை, கௌரவத்தைக்

கருதாது, காரியத்தில் கண்ணாய் இருந்தாலே போதும். பிரிந்து போக விரும்பும் ஆந்திரத்தின் பொருளாதார நிலை அறிய வந்திருக்கும் 'வாஞ்சூ'விடம் குட்டை குழப்பாமல், ஒருமுகமாக நம்கருத்தைத் தெரிவித்து, பெருகிய குடும்பத்தில் பிள்ளைகளைத் தனிக் குடித்தனம் வைப்பதுபோல் ஆந்திரத்துடன், கன்னடம், மலையாளப் பகுதியினரையும் தனித்தனியே பிரித்து அவரவர்கள் மொழி, கலாச்சாரங்களுக்கேற்ப இயங்கச் செய்வதே நலம் என்பதையும் கூறி, அடுத்த ஆண்டுத் தைப் பொங்கல் நாள் தனித் தமிழ் நாட்டில் கொண்டாடும் சூழ்நிலையை உண்டாக்குவோமாக.

மீண்டும் காமராஜ்!

"காங்கிரஸ் கட்சிக்குள் அடுத்த ஆறு மாதத்தில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதில் மீண்டும் காமராஜரே வந்தால்கூட ஆச்சரியமில்லை" என்று 30—4—52ல் திரு. காமராஜ், டாக்டர் சுப்பராயரிடம் ஒப்படைத்ததையொட்டி நமது 'மகிழ்ச்சி' வைகாசிஇதழில் எழுதி இருந்தோம். அதன்படியே நடந்துவிட்டது. 26—12—52ல் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் திரு. காமராஜ் அவர்கள் ஏகமனதாகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுயநலமில்லாதவர், சகிப்புத் தன்மை கொண்டவர், சகாக்களை தம்முடன் கட்டிஇழுத்துக்கொண்டு போகும் திறமையுடையவர், இடைவிடாத உழைப்பும் ஊக்கமும் பெற்றவர், தாய் தகப்பனுக்கு ஒரேமகனாக இருந்தும், கல்யாணத்தை வெறுத்து, கட்சியின் கட்டுப்பாடும் காரியமுமே பெரிதென வாழ்வைத் தியாகம் செய்தவர்—இப்படிப்பட்டவரைத் தேடி பதவி ஓடி வருவதில் ஆச்சரியமில்லைதான். ஒவ்வொரு கட்சிக்கும் இப்படிப்பட்ட உண்மை ஊழியர்களே தேவை!

பாவம்! கல்கி கும்பல்களுக்கு காமராஜரின் வருகை கலக்கத்தை உண்டுபண்ணி இருக்கும் என்பதில் ஐயமில்லை. திரு. சுப்பராயன் பதவி ஏற்றபோது பத்தி பத்தியாக எக்காளத்துடன் எழுதிய கல்கியார் இன்று ஒருவரிகூட எழுதாததின் மர்மமென்ன?

சுயநலமே வாழ்க்கையாகவும், சொந்தக்காரர்களுக்கு சலுகைகள் தேடித் தருவதும், வேண்டாதவர்களை சிண்டுமுட்டி உள்ளொன்று புறமொன்று பேசித் திரிவதுமே தொழிலாகவும், மனவாடுகளை உயர்த்த படம் போட்டு பக்கமேளம் கொட்டுவதே இலட்சியமாகவும் கொண்ட இப் பிற்போக்குக் கும்பல்களுக்கு, அன்று பாரதிதாசன் அவர்கள்தொடுத்த "பெருநிலையில் இருக்கின்றீர் காமராசப் பெருந்தகையீர்! உம்பெருமை, அவர்கள் கண்ணில் கருவேலின் முள்போலே உறுத்தும்......காமராசரே, எம் தோழரே, திராவிடரே, உமதுமேன்மைதொலைப்பதற்கும் வழிபார்க்கும் கோட்சே கூட்டம்! ஆழ்ந்திதனை எண்ணிடுக. கோட்சேகூட்டத்ததிகாரம் ஒழியுமட்டும் மீட்சி இல்லை" என்ற சொல்லம்புகள் மிகமிகப் பொருத்தம் என்றே தோன்றுகிறது.

அட்டைப்படத்தில் ஆந்திர அழகி அஞ்சலிதேவி

திரைப்படங்களில் நடிக்க விரும்புகிறேன்.

(புதுநடிகர்கள் விரும்பும் படப்பிடிப்பாளர்கள் கவனத்திற்கு)

என் வயது 20 சுமாராகப் பாடுவேன். பள்ளிநாடகங்களில் நடித்திருக்கிறேன். நடிப்பில் ஆர்வமிக்க எனக்கு, எந்தப் போஷன் கொடுத்தாலும் நடிக்கச் சித்தமாக இருக்கிறேன்.

எஸ். ராமகிருஷ்ணன்,
ராஜாமணிவிலாஸ் டீ ஹோட்டல்
விருதுநகர் மெயின் ரோடு,
சிவகாசி.

(இப்பகுதியில் தங்களை அறிமுகம் செய்ய விரும்பும் சகோதர சகோதரிகள், தங்கள் முழுவிபரத்தையும் புகைப்படத்துடன், ஐந்து ரூபாயும் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும். பிளாக்குகள் நாங்களே தயார் செய்துகொள்வோம் —ஆசிரியர்.)

உடம்பு வலிக்கு "கிங்காங்"

அலுப்பு மருந்து!

மேல் வலிக்கும் தொழிலாளர்களுக்கு...
கால் கை உளைச்சல் எடுக்கும் உழைப்பாளிகளுக்கு...
பிரசவித்து வேதனைப்படும் பெண்களுக்கு...
வயிற்றுப் பொருமலில் வாதைப்படுவோருக்கு...

—* கிங்காங் அலுப்பு மருந்து *—
பூரண குணத்தைக் கொடுக்கும்.

ஏஜண்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

தயாரிப்போர்:
தனலக்ஷ்மி ஸ்டோர், :: லிங்ரோடு, விருதுநகர்

நாங்கள் கண்ட தர்மம்

MADR

[நடிகர் டி. எஸ். பாலையா]

புயலால் பாதிக்கப்பட்டுத் தத்தளிக்கும் மக்களின் உதவி நிதிக்காக தர்மத்தை நாடி நானும் எனது நண்பர்கள் சிலரும் கிண்டி ரேஸ் கோர்ஸுக்கு சென்றோம். அங்கு வந்த இலட்சக்கணக்கான மக்களைக்கண்டு எங்கள் கண்கள் பூத்துப்போயின. 'கேட்'டிற்கு இரண்டிரண்டு பேர்களாகப் பிரிந்து, நிதிஉதவும்படி எழுதியிருந்த 'போர்டு'களையும் பைகளையும் கைகளில் எந்தி நின்றோம். அனுமதியின்றி எந்த வசூலும் செய்யக்கூடாது என்ற 'ரேஸ் கோர்ஸ்' அதிகாரிகளின் சத்தம் எங்கள்காதில் விழுந்தது. அவ்வளவுதான், எங்கள் நாடி தளர்ந்துவிட்டது. தர்மத்திற்காக முன் வைத்த காலை பின்வைக்க நேர்ந்துவிடுமோ என்ற கவலை எங்களைச் சூழ்ந்துகொண்டது. இருந்தபோதிலும் எங்கள் தைரியத்தைக் கைவிடவில்லை 'எங்கள் சுயகாரியத்திற்காகவரவில்லை. பொதுக் காரியத்திற்காக வந்திருக்கிறோம். நீங்கள் இதற்குப் பணம் உதவுவதற்குப் பதிலாக உங்கள் மேலதிகாரிகளிடம் அனுமதிவாங்கிக்கொடுங்கள்' என்று முகம் வெளுக்க மன்றாடினோம். அவர்களும் எங்களுக்கிரங்கி காகிதத்தில் எழுதி அனுப்பினார்கள்.

'ஜனங்களுக்கு இடையூறு இல்லாத முறையில் வசூல் செய்யலாமென காரியதரிசி அனுமதித்திருக்கிறார்' என்று எங்களுக்கு கூறப்பட்டது. இதைக் கேட்டதும் எங்கள் கைகளில் இருக்கும் ஒவ்வொரு பையும் நிரம்பிவிடுமென்ற சந்தோஷத்தோடு 'ரேஸ் கோர்ஸ்' உத்தியோகஸ்தர்களை வாயாரப் புகழ்ந்துவிட்டு வரிசையாக நின்று வருபவர்களுக்கு வணக்கம்செலுத்தி நிதிக்கு உதவும்படி தாழ்மையாக கேட்க ஆரம்பித்தோம்.

நாங்கள் கேட்காத ஒரு அன்பர் தூரத்திலிருந்து வந்து நான் எந்தி நின்ற பையில் ஒருரூபாயைப் போட்டுவிட்டுச் சென்றாரே தவிர வேறு ஒரு கையும் எங்கள் பையை அணுகவில்லை. பிறகு கொஞ்சம் சத்தம் போட்டுக் கேட்க ஆரம்பித்தோம். ஆனால் அங்குவரும் 'டிப்டாப்' அன்பர்கள் எங்கள்முகங்களைப்பார்த்தும் பார்க்காததுபோல்போவதைக் கண்டதே அல்லாது வேறொன்றும் நாங்கள் காணவில்லை. பிறகு இடத்தைச் சிறிது மாற்றி இரண்டரை ரூபாய் 'கேட்'டில் நின்று கேட்க ஆரம்பித்தோம். அந்தவிடத்தில் ஒருசில கைகள் எங்கள் பைகளை அணுக ஆரம்பித்தன. அவர்கள் முகங்களைப் பார்க்கும்போது அந்நிய பாஷைக்காரர்களின் முகங்கள்தான் அதிகமாகக் காணப்பட்டன. நம் தமிழ் நாட்டு மக்கள் தருமக் கரம் நீட்டுவதை நாங்கள் அதிகமாகக் காணவில்லை. காலணாவிலிருந்து ஒரு ரூபாய் வரையில் ஒவ்வொருவரும் ஐம்பது அறுபது பேர்களுக்கு ஒருவராக கட்டாந் தரையில் புல்

முழுத்தமாதிரி போட்டுவிட்டு உள்ளே ஓடினார்கள்.

இச்சமயம் இரண்டு மூன்று ஆங்கிலேயநண்பர்கள் வருவதைக்கண்டு தமிழ் நாட்டு மக்களே தருமத்தைக் கடைப்பிடிக்கவில்லையே இவர்கள் கொடுக்கவா போகின்றார்கள்என்று மனமில்லாமல் பையை அவர்கள் முன் நீட்டினோம். கையிலிருந்த போர்டை அவர்கள் படித்துவிட்டு எங்கள் பையில் அவர்கள் கைக்கு வந்த பணத்தைப் போட்டுவிட்டுப் போனார்கள். இவர்களுக்கு உள்ள ஈகைக் குணம்கூடநம் தமிழ் நாட்டு மக்களுக்கு இல்லையே என்று மிகவும் கவலைப்பட்டோம். அட! அது தான் போகட்டும். தமிழர்களே சிலர் தமிழில் எழுதியிருந்த போர்டைப் பார்த்துவிட்டு 'என் சார், இந்தபோர்டை இங்கிலீஷில் எழுதியிருக்கக்கூடாதா?' என்ற வெறும் கேள்விகளைக் கேட்டுவிட்டுப் போய் விட்டார்கள். ஜரிகை அங்கவஸ்திர மணிந்த இரண்டு ஆசாமிகள் வருவதைக் கண்டு அவர்களுக்கு முன் பையை நீட்டினோம். 'இது எதற்கு சார்?' என்று எங்களை கேட்டார்கள். 'புயல் நிவாரண நிதி' என்று நாங்கள் பதிலளித்தோம். 'நாங்களும் புயலில் அடிபட்டவர்கள்தான்சார். எங்களுக்கு தஞ்சாவூர். அடடே, முதல் ரேஸ் முடிந்துவிடும்போல் இருக்கிறதே' என்று கூறியவர்களாய் எங்களை இடித்துத்தள்ளிவிட்டு பறக்கப் பறக்க ஓடினார்கள். எங்களுக்கு எப்படியிருக்கும்? 'இப்படிப்பட்ட மக்கள் இருக்கும் நம் தமிழ்நாட்டில் புயல்மட்டுமா வரும், பூகம்பமும் கலந்து வரும்' என்று சொல்லிக் கொண்டே வசூலில் கவனம்செலுத்தினோம். நூற்றுக்கு ஒன்றிரண்டு பேர் சில்லறைகள்போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருகூட்டமாகவந்து ஒரு ரூபாயைப் போட்டுவிட்டு தாங்கள் அத்தனை பேரும் ஒன்றுதான் என்று சொல்லிப் போனவர்களும் உண்டு. கால் ரூபாயைக் காட்டிவிட்டு சில்லரைகேட்டுவிட்டு சும்மா போனவர்களும் உண்டு. முழு ரூபாயைப் போட்டுவிட்டு போட்ட ரூபாய்க்கு பூராச்சில்லறையும் எடுத்துக்கொண்டுபோன மகானுபாவர்களும் உண்டு. இவர்கள் எல்லாம் தமிழர்கள்தான். தமிழர்களின் ஒற்றுமையைப்பற்றி பத்திரிகையில் தான் பார்க்கிறோமே தவிர நடைமுறையில் பார்க்க முடியவில்லையே. இதர தேசங்களில் பஞ்சமோ, புயலோ, பூகம்பமோ ஏற்பட்டுவிட்டதென்றால், தங்கள்குடும்பத்தில் ஏற்பட்டுவிட்டதைப் போல எண்ணி தங்கள் சுய விளம்பரத்திற்காக இலட்சக்கணக்கானபணத்தை ஒரே 'செக்'கில் நிரப்பி அனுப்பும் தமிழ் மக்களைக் கண்டும் கேட்டும் இருக்கிறோம். ஆனால் தன் தமிழன் தத்தளித்தோம் போடும்போது தம்படி போட மனம் வரவில்லை.

நாங்கள் வசூல் செய்துகொண்டிருக்கும்போது வடநாட்டு நடிகர் திரு. மோதிலால், எங்கள் பையில் ரூ. 5 போட்டுவிட்டு நாங்கள் மேற்கொண்ட காரியத்தைப் புகழ்ந்துவிட்டுப் போனதை நாங்கள் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

பணமில்லாதவர்கள் அங்கு வரமாட்டார்கள். ஆகவே நிறைய வசூல் செய்யலாம் என்ற எண்ணத்தில்தான் நாங்கள் ரேஸ்கோர்ஸுக்குப் போனோம். பந்தயத்திற்கு வருபவர்கள் தலைக்குஒருரூபாயாவது

போடுவார்கள் என்ற பேராசையின் பேரில்தான் நானும், நண்பர்கள் எம். கே. ராதா, டி. பாலசுப்பிரமணியம், வி. ஹொன்னப்ப பாகவதர், எம். என். நம்பியார், எம். ஜி. சக்ரபாணி, வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், டி. வி. ராதாகிருஷ்ணன், ஈ. ஆர். சகாதேவன், கே. அப்பன்ராஜ் ஆகியோரும் அங்கு சென்றோம். ஆனால் எங்கள் பேராசை பெருநஷ்டமாக மாறி வெட்கத்துடன் வீடு திரும்பினோம்.

பணத்தைக் கைக்குடையில் கொட்டி எண்ணிப் பார்த்தோம். எண்ணி எண்ணிப் பார்க்க மனம் புண்ணாகப்போகுமே என்பதுபோல் ஆகிவிட்டது வசூல். எங்களுக்கு வசூலான தொகை ரூ. 176—2—0 இந்த தொகையை தமிழ்நாடு புயல் நிவாரணக் கமிட்டியாருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். வசூலுக்குச் சென்றிருந்த ஒவ்வொரு நடிகரும், அவரவர்களின் சக்திக்கேற்ப பொருளுதவி செய்து நிதியை ஒரு கணிசமான தொகையாகக் கொடுக்கப்போகிறோம்.

"வந்தவருக்கெல்லாம் வாரி ஈந்துமே வள்ளலாகினான் தமிழன்" என்று பாடிப் பெயர்பெற்ற தமிழ்நாட்டில், அதுவும் தலைநகராகிய சென்னைப் பட்டினத்தில், அதிலும் இலட்சக்கணக்கில் பணம் புரளும் குதிரைப் பந்தயம் நடக்குமிடத்தில், தமிழ்மக்கள் குவிந்திருக்கும் கூட்டத்தில் வசூலான தொகை ரூ. 176—2—0 மட்டும் அனுப்பினால் எங்களுக்கு மட்டுமல்ல, 'வாரியீந்த வள்ளல்களாகிய தமிழர்'களுக்கும், 'தருமம் தழைத்தோங்கும் தமிழ் நாட்டுக்கும்' என்றும் அழியாத புகழ் கேவலத்திற்கு இடமாகும். இப்படி எழுதுகிறேன் என்று தமிழ்நாட்டு ரத்தபாசமுடையவர்கள் ஆத்திரப்பட்டு என்மேல் குற்றம் கூறவேண்டாம். எங்கள் நிலையில் நீங்கள் இருந்து வசூல்செய்து பார்த்தால் நிச்சயமாக நியாயபுத்தியுள்ள எவரும் என்மீது கோபம் கொள்ளமாட்டார்கள். எல்லோர் உடலிலும் ஒரேவிதமான இரத்தம் தானே ஓடுகிறது. நம்நாட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்களே என்றுதானே நாங்கள் வசூல் செய்யக் கிளம்பினோம். எங்கள் சுயநலத்திற்கா? அல்லது விளம்பரத்திற்கா? எங்களுக்கு, ஏற்கனவே உங்களால் கொடுக்கப்பட்ட புகழ் போதுமானது.

இன்னும் நாங்கள் எவ்வளவோ எழுதமுடியும். ஆனால் எங்கள் ஒவ்வொருவருக்கும் பலவிதமான வேலைகள் இருக்கின்றன. ஆகையினால் இத்துடன் உங்களிடம் நாங்கள் எடுக்கும் யாசகத்தையும், எழுதும் வாசகத்தையும் நிறுத்திக்கொண்டு, நீங்கள் தருமம் செய்யாவிட்டாலும், தரும கைங்கரியத்திற்காக நாங்கள் நடத்தும்நாடகங்களுக்காவது வந்து, அதன்மூலம் புயலால் அவதிப்படும் மக்களுக்கு உபகாரம் செய்யுங்கள். தமிழன் தமிழன் என்று பேசி தம்பிடிகூட கொடுக்காமல் இருந்துவிடாதீர்கள். எல்லோருக்கும் வணக்கம். (சுதேசமித்திரன்)

அருப்புக்கோட்டை
ஆறுமுகம் களிம்பு
REGD No. 103710
எந்த ரணமாயிருந்தாலும் இதைத் துணியில் தடவி உபயோகித்தால் சீழ் ஜலத்தை வெளியேற்றி ஆற்றும்
அ. ராம. மு. ஆறுமுக பாண்டியனால் தயாரித்தது.

[கடந்த கதை: ராமனும் ஜானகியும ஒருவரை ஒருவர் காதலித்து மோதிரம் மாற்றிக் கொள்கிறார்கள். வியாபாரநிமித்தம் ராமன் கொளும்பு போகிறான். பின்......]

4

பாட்டி:

எனக்கொரு சாவு முந்தி வரவில்லை. என் மகளுக்கு வந்துவிட்டது. என் மகளும் வாழக் கொடுத்து வைக்காதவள்தான். ஜானகி குழந்தையாக இருக்கும்போதே தாலி அறுத்துவிட்டாள்.

உலகத்தில் ஆயுசாவது ஆஸ்தியாவது பலமாக இருக்கவேண்டும். இரண்டும் இல்லாவிட்டால் என்ன செய்வது? ஜானகியை என்னிடத்திலே ஒப்படைத்துவிட்டு, என் மகள் சிவலோக பதவி அடைந்தாள்!

நல்ல வேளையாக அந்தக் கடவுள் எனக்கு ஆஸ்தியை கொடுக்காவிட்டாலும், ஆயுசை கொடுத்திருந்தான். இல்லாவிட்டால்... என் பேத்தி ஜானகி கதி?

நானும் ஜானகியை ஏதோ இரண்டெழுத்து படிக்க வைத்தேன். மேலும் படிக்கட்டும் என்று அந்த வாத்தியாரம்மா என்னை கெஞ்சினார்கள். ஆனால் நான் ஒரேயடியாய் முடியாது என்று சொல்லிவிட்டேன்.

பத்துவரைக்கும் படித்தால் நல்லது என்கிறார்கள். எனக்கென்னமோ அது பிடிக்கவில்லை. படியாதஎனக்கு கொஞ்சம்உலக அனுபவம் உண்டு. பத்துவரையிலும்படித்துவிடுவதால் கிடைக்கக்கூடிய விசேஷபலன் என்ன? வாழ்க்கைக்கு வேண்டிய ஏதாகிலும் சொல்லிக்கொடுக்கிறார்களா?

பத்துப் படித்த பலபெண்களை நானும் பார்த்திருக்கிறேன்.

அவர்கள் பத்துப் படித்துவிட்டதால் வாழ்க்கையிலே என்ன முன்னேற்றத்தைக் கண்டுவிட்டார்கள்? துணிவெளுக்கப் போடுகிற கணக்கு எழுதத்தான் அந்தப் படிப்பு பயன்படுகிறதே தவிர, வேறு உண்டா?

இங்கிலீஸ் படிக்கிறார்களாம்! அதாவது உருப்படியாக படிக்க முடிகிறதா? பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டுக்குவந்த மறுவருடத்தில் படித்த இங்கிலீசில் ஏ, பி, சி, டி, தான் மறக்காமல் இருக்கிறதேதவிர, இங்கிலீசில் ஒருகடிதாசிஎழுதவோ வாசித்து அர்த்தம் தெரிந்துகொள்ளவோ, பேசவோ, முடிகிறதா?

உருப்படியாக ஒரு உபயோகமும் இல்லாத இந்தப் படிப்பு அவசியந்தானா? வெறும் அழுக்குத் துணிக் கணக்கு எழுதத் தெரிந்துகொள்ள பத்துவரை படிப்பது அவசியமா? அதனால் தான் நான் ஜானகியை அதிகமாக படிக்கவைக்கவில்லை.

உத்தியோகம் பார்க்க ஆசைப் படுபவர்கள் படிக்கவேண்டியது தான். புருஷனோடு குடும்பம் நடத்த நினைக்கிற வீட்டு வேலை செய்யும் பெண்கள் இவ்வளவு படித்து பணத்தை பாழாக்க வேண்டிய அவசியமில்லை. குடும்பம்நடத்தும் முறைபற்றி சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் அவசியம் படிக்கவேண்டியது தான். அதுதான் ஒரு பள்ளிக்கூடத்திலும் கிடையாதே! இந்த நிலையில் ஜானகிக்கு மேல்படிப்பு அவசியமா?

ஏதோ நாலும் மூணும் எழுதத் தெரிந்தால் போதும் என்று படிக்க வைத்தேன். இனிமேல் எவனுக்காவது கட்டிக்கொடுக்கலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டேன்!

இன்றைய பெண்கள் படிப்பு, பகட்டுக்கும் மினுக்கிற்குந்தான் பயன்படுகிறது. இரட்டைச் சடை போடவும், சினிமாக்காரி போல முகத்திலே பவுடர் பூசி, உதட்டிலேசாயம்பூசவும், வயிறு தெரியும்படி சட்டை போடவும் போன்ற (அ)நாகரீக செயல்களுக்குத்தான் இன்றைய பெண்கள் படிப்பு பெரிதும் பயன்படுகிறது. சுருக்கமாகச்சொன்னால் எப்படி பகட்டுவது, மேனிமினுக்குவது என்பதைத்தான் இன்றைய படிப்பு பெண்களுக்கு கற்றுக்கொடுக்கிறது.

இப்படிப்பட்ட படிப்பு உதவாது என்றுதான் ஜானகியை நான் மேலேபடிக்கவைக்கவில்லை ஏதோ ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, குழந்தைகுட்டியோடு அவள் சௌக்கியமாக இருந்தால்போதும்என்று நினைத்தேன்

என் மகளை கட்டிக் கொடுக்கும்போது, அவள் அபிப்பிராயத்தை நான் கேட்கவே இல்லை. கல்லானாலும் கணவன்! புல்லானாலும்புருஷன்! என்றபடிதான் அவளும் வாழ்ந்துவந்தாள்.

ஆனால் அவள் தலைவிதி ஜானகி யை என்னிடம் விட்டுவிட்டு புருஷன்கூடவேபோய்விட்டாள்.

ஜானகிக்கு நல்ல இடமாக அவள் சம்மதம் கேட்டு கல்யா ணம்செய்ய நினைத்தேன். இரண் டொரு வரன்களைச் சொல்லி "பிடிக்கிறதா" என்றுகேட்டேன் "கல்யாணம் வேண்டாம்" என்று தலையை குனிந்தபடி பதில் சொல்லி வந்தாள். பெண்களுக் குரிய இயற்கையான வெட்கத் தால்தான் அப்படிச்சொல்கிறாள் என்று நினைத்தேன்.

ஆனால்......

ஒருநாள் அடுத்தவீட்டு ராம ரைக்கண்டு பல்லிளித்து ஜானகி நிற்பதைக் கண்டேன். இதனால் தான் கல்யாணம் வேண்டாம் என்றுசொல்லிக்கொண்டுஜானகி வந்திருக்கிறாள்என்பதை உணர்ந் தேன்.

படித்த பெண்கள்தான் காதல் என்ற கானல்நீரைக்கண்டு மான மிழந்து பிணமாகிறார்கள் என்று இதுவரை நினைத்துவந்தேன். ஆனால் இந்தக்காலத்து படியாத பெண்களுக்கும் காதல் என்றால் என்ன என்று தெரிந்துதான் வைத்திருக்கிறார்கள். சினிமா கற்றுக்கொடுத்ததோ என்னவோ யார் கண்டது!

என் காலத்திலே காதல்என்ற வார்த்தை பெரும்பாலும் ஏட் டிலே இருந்ததேதவிர, வாழ்க் கையில் இருந்ததே இல்லை. ஆண் பெண் இருபாலருக்கும் காதல் இன்னதென்றே தெரியா மல் இருந்தது. தாய் தகப்பன் பார்த்து கட்டி வைக்கிற புருஷ னோடு சந்தோசமாகத்தான் ஒவ் வொருவரும் வாழ்ந்துவந்தனர்.

கணவனை பெண்களே தேர்ந் தெடுக்கவேண்டும்என்று படித்த பெண்கள்தான் கூறுகிறார்கள் என்று நினைத்தேன் ஆனால் அவ்வளவாக படியாத ஜானகி கூட கணவனை தானே தேர்ந் தெடுக்க ஆரம்பித்ததைக் கண்டு எனக்கு கோபமும் வருத்தமும் ஏற்பட்டது.

காதல்என்பது வெறும் பசப்பு வார்த்தையாகஇருக்கிறதேதவிர, பாச வார்த்தையாக இருப்பது இல்லை.

காதலித்து கல்யாணம் செய் யும் உரிமையை இன்றுள்ள பெண்களுக்கு கொடுத்தால் கற் புக்கெட்ட நிலைதான் ஏற்படுமே தவிர, சமத்துவம் ஏற்பட்டு விடாது. காதல் மணத்திற்கு உரிமை தருவதற்கு முன்பு, பிறப்பில் இருந்தே சகோதரத் துவ உணர்ச்சி வளர்க்கப்பட வேண்டும்.

இது தெரியாதபடி, காதலை நம்பி, ஜானகி ராமனை நேசிக்கி றாள் என்றால் அதன் முடிவு? இதனால்தான் ஜானகியை நான் கண்டித்தேன். பணக்கார வாலி பர்களை நம்புவது படுகுழியை பளிங்குப்பதை என்று நம்புவது போலாகும்என்று சொன்னேன்.

பேதைஜானகி ராமனை நேசித்து, பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்து கண்ட பலன் என்ன? ராமனுக்கு பெண்பார்க்க அவன் மாமன் தீவிரமுயற்சியில் இருந்தான். கல்யாணத் தரகன்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். ராமன் சம்மதமில்லாமலா இத்தனையும்நடந்துவந்தன இப்படிப்பட்டவனைகாதலித்தால் — நம்பினால் — கிடைக்கக்கூடிய லாபம் கெட்டபெயர்தானே?

பெற்றோர்கள் காதலுக்கு தடை விதிக்கிறார்களே என்று பலபெண்கள் ஜானகியைப்போல கண்ணீர் விடுகிறார்கள், காதல் என்பது தீயாகவும் தேளாகவும் இருக்கும்போது அதைதீண்டிட அனுமதிக்க முடியுமா? கண்டிப்பதுதானே நேர்மை?

குழந்தைகளை கண்டிப்பதும், அடிப்பதும் அவர்களைத் திருத்த வேண்டும் என்பதற்காகத்தான்; வருந்த வேண்டும் என்பதற்காக அல்ல. ராமனை மறந்துவிடு என்று நான் ஜானகிக்கு சொன்னேன். அவள் நன்மைக்காகவே அவ்விதம் சொன்னேன்.

(தொடரும்)

விருதுநகர்

நியூமுத்துவில்

சிவாஜி கணேசன்,
கிருஷ்ணன், மதுரம்,
பத்மினி நடித்த

பணம்

வசனம்: மு. கருணாநிதி
டைரக்ஷன்: N.S. கிருஷ்ணன்

இப்பொழுது
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

எமது அடுத்த
புதிய வெளியீடு!

நாகையா,
T. S. பாலையா,
T.R. ராஜகுமாரி நடித்த

என் வீடு

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

(இரண்டாம் பதிப்பு)

விற்பனையாகிவருகிறது!

பாலகுருகுல வித்யாலயத்தில் சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்றுக்கொடுத்து வெற்றிகண்டு இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. கீழ்வகுப்புமுதல் மேல்வகுப்புவரை தமிழைத் தாங்களே எளிதாக விரைவில் பிழையின்றி எழுத, வாசிக்க விரும்பும் ஒவ்வொரு மாணவ மாணவிகளிடமும் இருக்கவேண்டிய புத்தகம்.

தமிழ் நாடெங்கும் விரைவில் புத்தகம் பரவவேண்டுமென்ற எண்ணத்துடன் இப்புத்தகம் மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது. நயம் கிளேஸ் தாளில் கெட்டியான அழகிய அட்டையுடன் 120 பக்கங்கள் கொண்ட புத்தகம்.

விலை அணா எட்டு

மூன்று புத்தகங்களுக்குக் குறையாமல் ஆர்டர் செய்தால் அவைகளை அனுப்பும் தபாற் செலவு இலவசம்.

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பாலகுருகுல வித்யாலயம்,
விருதுநகர்.

கார்டு கட்டுரைப் போட்டி 3 முடிவு

எனது ஒருநாள் ஆசை

* இவ்வையகத்தில் வாழ்வெடுப்பது நல்வாழ்வுவாழ்வதற்கா? அல்லது வாழ்வு சிதைந்து சீரழிக்கப்படுவதற்கா? பாட்டாளியின்உடல்சேற்றிலே; பாடுபடாத பகட்டுக்காரர்களின் உடல் பஞ்சணையிலே சரித்திரம் ஒருபுறம்; தனலெட்சுமியின் அருள் பெற்றவராகக் கூறிக்கொள்பவர் மற்றொருபுறம். அடக்குமுறைகளால் வாட்டி வதைக்கப்பட்டு, வாழ்வு நடத்தும் தொழிலாளர் வர்க்கம் ஒருபக்கம்; அடக்கி ஆள்வதே தங்களின் ஏகபோக உரிமையாகக்கொண்டு செல்வச் செருக்குடன், உல்லாசவாழ்வு நடத்தும் சுயநல வர்க்கம் பிறிதொரு பக்கம். அதுமட்டுமல்ல, இவர்களிடையே எண்ணற்றபிளவுகள் காணப்படுகின்றன. கணக்கற்ற கருத்து வேற்றுமைகள் விரிந்துகிடக்கின்றன. இந்தப் பகுத்தறிவுக் காலத்திலே, இத்தகைய நிலை இன்னும்நீடிக்கலாமா? நாகரீக நாடுகளில் நடமாடலாமா? இந்நிலைகள் கண்டிப்பாகமாறவேண்டும்.

அனைவரும் சமூகமென்னும் சமதரையில் ஒற்றுமையென்னும் ஏர்கொண்டு உழுது, சமஉரிமையென்னும் விதை விதைத்து, சமத்துவமென்னும் எருவிட்டு, ஆதரவென்னும் அன்புநீர் பாய்ச்சி, பொறாமை, பூசல் போன்ற பிற்போக்கென்னும் களையெடுத்து, நல்வாழ்வென்னும் நற்பயிரினை வளர்க்கவேண்டும். அத்தகையபயிர் நம்நாட்டில் கூடிய சீக்கிரம் வளர்வதைப் பார்த்து மனமகிழ்ச்சி அடையவேண்டுமென்பதே எனது ஒருநாள் ஆசை

அ. வை. சுப்பிரமணியன், அரங்கூர்

* * * *

ஒருநாள் வரவேண்டும் அந்த நாள் ஓர் இலட்சியத் திருநாளாக, வரப்போகும் புத்துலகின் ஆரம்ப நன்னாளாக இருக்க வேண்டும், எனக்குமட்டுமல்ல, மக்கள்எல்லோருக்கும்! அந்தநாள் முதல் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் அன்பில் புத்தராகவும், அகிம்சையில் காந்தியாகவும், ஆத்ம சோதனையில் ஏசுவாகவும், சாந்தத்தில் லிங்கனாகவும், சத்தியத்தில் நபிநாயகமாகவும், நீதியில்நெடுஞ்செழியனாகவும், வீரத்தில் நெப்போலியனாகவும், இல்வாழ்வில் வள்ளுவராகவும், மக்களுக்குப் பாடுபடுவதில் மார்க்கீஸ், லெனினாகவும் மாற வேண்டும்! அந்த நாள்முதல் மக்கள் கவலையைமறந்து மகிழ்ச்சிக் கூத்தாடுவர். வறுமையும், இல்லாமையும் அங்கே இருக்காது. மக்களுக்குச் சூதும் வாதும், பேதமும் குரோதமும் தெரியாது. ஏற்றத்தாழ்வு, உற்றோர் மற்றோர் என்ற வேற்றுணர்வுகள் ஒழியும். அன்பும் அறமும், உண்மையும் சத்தியமும் ஆட்சி நடத்தும். உலகம் முழுதும் ஒற்றுமையுள்ள ஒரேகுடும்பம்போல் நடைபெறும். ஏழை, அடிமை போன்றசொற்கள் அகராதியில்கூட

இருக்காது. அன்றுமுதல் பெண்கள் எல்லாத் துறைகளிலும் மதித்து நடத்தப்படுவர்; வாழ்வில் ஓர்கண்ணெனப் போற்றப்படுவர் அந்த நாள் வரவேண்டும். நாளையல்ல, நாளைநின்றல்ல, என்றாகிலும் ஒரு நாள். அந்தப் புண்ணியத்திருநாளை, மேலும் புரட்சி விரும்பாத பொன்னுளை, கள்ளமில்லாத உள்ளத்தோரை மட்டும் காணக் கிடைக்கும் ஒரே நாளை; என் கனவு நனவாகும் நன்னுளை, அந்த ஒரு இலட்சிய நாளை, நான் என் கண்ணுரக் காணவேண்டும் ஒரு நாள் ஒருபோதாகிலும்! என் கண் இமை அதற்கு இடையூருயிருந்தால் அதைப் பிடிங்கி எரிந்து விட்டு இதேகண்களை அகலவிரித்து அன்னுளைக் காண வேண்டும். அந் நாள் என் வாழ்வின் இருதியாக இருந்தாலும் அதை மகிழ்ச்சியோடு எற்று, என் உயிரின் கடைசி மூச்சு என் உடலில் இருக்கும்வரை, ஓடி, ஓடி, முடிந்தால் பறந்து, மக்கள் எல்லோருடைய மகிழ்ச்சிபொங்கும் வதனங்களை நான் காணவேண்டும். இதுவே என் ஒரு நாள், ஒரே ஒரு நாள் ஆசை; மாருத, மறக்க முடியாத ஆசை.

எஸ். எம். தெய்வநாயகம், செவலார்பட்டி.

[* இவ்வடையாளமிட்டகட்டுரை எழுதிய "அ.வை சுப்பிரமணியன், (அறிவுச்சுடர்) அறை எண் 8, அம்பிகா லாட்ஜ், 18, லிங்கிசெட்டித் தெரு, ஜி டி. சென்னை-1" என்ற விலாசத்திற்கு பரிசு ரூ 1 அனுப்பப்பட்டது]

கார்டு போட்டி 4

"எனது பட்ஜெட்"

பரிசு ரூ 1

உங்களுக்கு மாத வருமானம் ரூபாய் ஐம்பது (50) வருகிறது என்றுவைத்துக்கொண்டு, குடும்பச் செலவு பட்ஜெட் ஒன்று தயார் செய்து, கார்டின் ஒரே பக்கத்தில் எழுதி 31—1—53க்குள் அனுப்பிவையுங்கள்.

குறிப்பு: கார்டின் இரு பக்கங்களில் எழுதியதால், இம்மாத இதழில் இடம் பெறவேண்டிய சிலருடைய கார்டு கட்டுரைகளை பரிசோதனைக்குழுவினர் நிறுத்திவிட்டனர்.

மகிழ்ச்சி இல்லம்—விருதுநகர்.

கீழ்க்கண்டவர்கள் அனுப்பிய தினசரி, மாதக் காலண்டர்கள் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

G. S. முத்தையா & பிரதர்,
பூமார்க் பீடி :; மைலாபுரம்.

M. K. T. ராஜ் & சன்ஸ்,
M. K. தியாகராஜ் பீடி, முக்கூடல்.

K. கருணையானந்தம்,
டெய்லிகாலண்டர் சப்ளையிங் பீரோ, சிவகாசி.

நெல்சன் அன் கோ.,
டைப் பௌண்டரி, சூளை, சென்னை.

தி மெட்ராஸ் டைப் பௌண்டரி,
சென்னை-1.

"வாரச் செய்தி"
கலைமகள் பிரஸ், காரைக்குடி.

இந்தியா டைப் பௌண்டரி,
சென்னை-7.

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி, பாலகுருகுலவித்யாலயம்
விருதுநகர்.

120 பக்கங்கள்—விலை அணா 8

இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ள இப்புத்தகத்தில், தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி, தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத ஒவ்வொருவரும் மிக எளிதில் கற்றுக்கொள்ள உதவும் வகையில் பாடங்கள் அமைத்து, மிகுந்தபிரயாசையுடன் தொகுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தனித்து, தமிழே ஆட்சிமொழியாக மலர அரும்பு விட்டுக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் ஆசிரியப்பயிற்சிபெறுவோருக்கும், குறிப்பாக முதியோர் கல்வி பயிற்றுவிக்கும் இடங்களிலும், ஆரம்பப் பள்ளிகளுக்கும் இப்புத்தகம் இன்றியமையாத ஒன்று என்று கருதுகிறோம். 120 பக்கங்களுடன் அழகியஎழுத்துக்களில் அருமையான கிளேஸ் வெள்ளைக்காகிதத்தில் அச்சிடப்பட்டு கெட்டியாக பைண்டு செய்யப்பட்ட இப்புத்தகத்திற்கு விலை அணா எட்டு என்பது மிகமிகக் குறைவே.

* * * *

காதற்கடல்

ஆசிரியர்: "அமுதன்"
ரதி பப்ளிகேஷன்ஸ்,
திருவையாறு.

பக்கங்கள் 20—விலை 4 அணா

நமது ஆசிரியர் எழுதிய நீண்ட தொடர்கதை அல்ல. ஆனால் அந்தத் தலைப்பில் வெளிவந்த ஒருசிறுகதை. எதுகை, மோனை, அடுக்குத் தொடர், அலங்கார வார்த்தை, இதுபோன்றவற்றை எண்ணி, அர்த்தமற்ற வார்த்தைகளை பொருத்தமற்று உபயோகித்து, கரடு முரடாக்கப்பட்டிருக்கிறது. சரளமாக வாசிக்க முடியவில்லை. கதைநன்றாகவே இருக்கிறது.

* * * *

பகுத்தறிவு நாள்காட்டி—1953

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம், சேலம் ஜில்லா.

$8\frac{1}{4}'' \times 6\frac{1}{2}''$ அளவு அட்டையின் ஒரேபக்கத்தில் ஒருவருடத் தெய்தி பூராவும் பார்க்கும்முறையில் புதுவிதமாக அச்சிடப்பெற்றுள்ளது. விலை அணா 1.

படித்தவள்!

[கடவுள்]

"நான் படித்தவள்! நாள்தோறும் நேரத்திற்கு நேரம், விதவிதமான 'டிரஸ்' செய்து கொள்வதும், முகத்தைச் சோப் பிட்டு மினுக்கி, அலங்காரம் செய்துகொண்டு, அதைக் காண் பிக்க ஊர் சுற்றுவதிலேயே என் பொழுதெல்லாம் சரியாய் போய் விடுமாம்! படித்தவளைக் கட்டிக் கொண்டால் நாளை உன்னைகூட மதிக்கமாட்டாள்!!" உன்னைகூட என்ற சொல்லில் மாமியாரை படித்தவள் மதிக்கமாட்டாள்! இது சகஜம்!! என்று உள் அர்த் தம் தொனிக்கும்படி வைத்தியக் கல்லூரியில் படித்து தேறி எம். பி., பி. எஸ். பட்டம் வாங்கிய ஒருவருடைய அன்னை என்னைப் பார்த்துவிட்டு சொன்னதாகக் கேட்டேன். ஏதோ என்னைப் பார்ப்பதற்கு வீடுதேடிவருகிறார்களே! அவர்களுக்கு மரியாதை கொடுப்போமேவென்று நன்றாக தலையை சீவிவிட்டு இரட்டைப் பின்னல் போட்டு இருந்தேன். இவ்வளவிற்கும் படாடோபமாக ஒன்றும் அலங்காரம் செய்து கொள்ளவில்லை! 'வாயல்' துணியில் தைத்த சோலியும், அதே கலரில் புடவையும் அணிந்திருந்தேன். இந்தக் காலத்தில் எல்லோரும்தான் பௌடர் இட்டுக் கொள்கிறார்கள்! இதற்கு படித் தவள் என்ற பட்டத்தை சுமத்தி என் பழி வாங்குகிறார்களோ தெரியவில்லை. கூந்தலை இரட் டையாகப் பின்னிப் போட்டுக் கொண்டதில் என்ன தப்போ! நான் கல்லூரியில் படிக்கையில் ஒருநாள் தமாஷாக இரட்டைப் பின்னல் போட்டேன். உடனே என் தோழிகள் 'உன்னைப்போல் ஒற்றைநாடி சரீரத்திற்கும், முக அமைப்பிற்கும் இரட்டைப்பின் னல் ஜடைதான் அழகாயிருக்கிறது. இனிஎப்பொழுதும் இரட் டைப்பின்னல்தான் போட வேண்டுமென்று உரிமைநிறைந்த அன்போடுசொன்னார்கள். எனக் கும் அதுதான் அழகாய் தெரிகிறது! அப்படியே போட்டுக் கொண்டேன் அதற்காக அந்த அம்மா என்முகத்தையும், ஜடை யையும் பார்த்த பார்வை!! நல்ல வேளை வேண்டாமென்று சொல் லிவிட்டார்கள்! இல்லையென்றால் என் வாழ்க்கை எப்படியாகி யிருக்குமோ!!

அன்றொருநாள் ஊரில் திரு விழா. வழக்கம்போல் அலங் காரம் செய்துகொண்டு அம்மா

வோடுபுறப்பட்டேன். அப்பொழுது இரண்டு வாலிபர்கள்—படித்தவர்களாய்த்தான் இருக்க வேண்டும்—என்னை பார்த்துவிட்டு எனக்குப்பின்னால் நின்று பேசிக்கொள்வது நன்றாக என் காதில் கேட்டது. அதிலிருந்து ஒருவர் என்னைப் பார்க்க வந்த அந்த அம்மாவின் மகன் என்று அறிந்தேன். வைத்தியப்பட்டம் வாங்கிய ஒரு எம். பி. பி. எஸ். அவர் சொன்ன சொற்கள்...... வியாதியஸ்தர்கள் யாராய் இருந்தாலும், ஏதோ "மிக்சர்" என்று கசப்பான மருந்தைக் கொடுப்பதுபோல் இருந்தது! உடலில் ஏற்படும் வேதனையைக் கவனியாது கத்திகொண்டு அவர் ஆபரேஷன் செய்வதுபோல் இருந்தது. அந்த கூர்மையான சொற்களை—என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்ட அந்த சொற்களை அப்படியே தருகிறேன்.

"நல்லவேளையாக இந்தபெண்ணை என்னுடைய அம்மா பார்த்துவிட்டு வேண்டாமென்று சொல்லிவிட்டாள். கலை உருவாக நிற்கும் இவளை கல்யாணம் செய்துகொண்டால், கலை உருவை காப்பாற்ற நிறத்திற்கு 'சூட்டாக' பவுடரும், சோப்பும், கலர் ஒருங்கே அமைய புடவை, வளையல், ரிப்பன்களும் வாங்கிக்கொடுப்பதற்கே முதலில் நான் சம்பாதிப்பது காணாது. படித்த பெண்கள் என்றாலேபகட்டுக்காரர்கள்தானே மேனியை மினிக்கிக்கொண்டு திரிவதுதானே வேலை! குடும்பம் என்றால் ஏதோ கேலிக் கூத்து என்று நினைப்பார்கள்போலிருக்கிறது. எதிலும் அடக்கஒடுக்கமாய் இருக்கத்தெரியாது. ஏதோ சுமாராய் ஆங்கிலம் எழுதப் படிக்க தெரிந்த பெண்ணை கல்யாணம்செய்துகொண்டால் அடக்க ஒடுக்கமாய் வீட்டோடு இருந்து குடும்பத்தை கவனித்துக்கொள்வாள்!" என்று ஒரு குட்டி பிரசங்கம் செய்தார். ஒருவேளை எனக்கு கேட்கவேண்டுமென்று சொன்னாரோ என்னவோ!!

அன்றிரவு எனக்கு தூக்கமே கொள்ளவில்லை. அம்மாவும் அப்பாவும்பேசிக்கொண்டது மேலும் கவலைக்குள்ளாக்கியது.

"நான் அந்தக் காலத்திலேயே சொன்னேனேகேட்டால்தானே. மகளை பி. ஏ. வரைக்காவது படிக்க வைத்தபின்தான் கல்யாணம் என்று சொன்னீர்கள்!"

"அதற்குஇப்பொழுது என்ன வந்துவிட்டது. அறிவும், திறமையும் நிறைந்த உன் மகளை படிக்க வைத்ததின் பெருமை உனக்கு எங்கே தெரிகிறது! இன்றுகூட அவள் காலேஜ் பிரின்ஸ்பால் அவளுடைய ஆங்கிலமொழி புலமையை புகழ்ந்து கொண்டிருந்தார்" என்றார் என் அப்பா.

"புகழ்ந்து என்ன பிரயோஜனம். அவள் படித்ததினால்தான் பார்க்கிறவர்களெல்லாம் படித்த

பெண் வேண்டாமென்று சொல்கிறார்கள். படித்த பையன்களே வேண்டாமென்று சொல்கையில் ....''

"சிலர் அப்படி இருந்தால் எல்லோருமே அப்படி இருப்பார்களா! உலகம் என்பது இந்த ஊர் மட்டுமல்ல! எல்லோரும் கல்வியின்—படித்த பெண்களின் மேன்மையை உணர இன்னும் நாள் செல்லவேண்டும். கல்யாணம் என்றால் பெண் சிகப்பா, லட்சணமாய் இருப்பாளா என்றுதான் இன்றும் கேட்கிறார்கள். என்ன படித்திருக்கிறாள் என்ற கேள்வி முதலில் வர இன்னும் நாட்கள் செல்லவேண்டும்'' என்றார் அப்பா.

"அதுவரைக்கும் காத்திருக்க வேண்டியதுதானா! அதற்குள் அவளுக்கும் வயதும், காலமும் போய்விடும்!''

''ஏன் கவலைப்படுகிறாய்? முடியும் காலத்தில் எல்லாம் தானே முடியும்'' என்று பேச்சைமுடித்தார்.

'அந்தக் காலத்தவர், நாகரீகமில்லாதவர், பத்தாம்பசலி ஆசாமி' என்றெல்லாம் தற்காலம் படித்தவர்களால் மதிக்கப்படும் அப்பாவின் உயர்ந்த எண்ணங்கள் என் உள்ளத்திற்கு, துயரத்திடையே ஒரு வழிகாட்டியாக இருந்தது.

என் சிந்தனை அலைகள் பல வகையாகப் புரண்டுகொண்டிருந்தது. என்னை படித்தவள், படாடோபக்காரி, ஆடம்பரக்காரி என்றெல்லாம் சொல்லும் இந்த படித்த பையன்கள் 'டிரஸ்'செய்யாமலா இருக்கிறார்கள். சாதாரண உடை போதாதென்று 'டுவீட் சூட்டு'தான் போட்டுக் கொள்ளவேண்டுமா! பௌடர், சுனோ தடவிக்கொள்ளாதவர்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள். படித்ததற்கு அழகு சிகரெட் பிடிப்பது என்று எண்ணுவது எந்த ரகத்தைச் சேர்ந்தது! இத்தனை ஆடம்பரமும், படாடோபமும் தங்களிடத்து இருந்தும் இவர்கள் ஏன் பெண்களைப்பற்றி பிரமாதமாகக் கதை அளக்கிறார்கள். கல்யாணம் என்ற சடங்கால், சமூகம் என்ற கட்டுப்பாட்டிற்கு இணங்கி, குடும்பம் என்ற குறுகிய வீட்டினுள் அடைபட்டுக் கிடக்காமல் உலகத்தில் உல்லாசமாய், தன்னிச்சையாய் சுய

மாய் தேடி வாழ தீர்மானித்து விட்டேன். குடும்பம் என்ற கூடு படித்தவர்என்ற தங்கத்தால் செய்யப்பட்டிருந்தாலும் சுதந்திரம் இல்லாத வாழ்வுதானே!

காலையில் புதுத் தீர்மானத்துடன் படுக்கையைவிட்டு எழுந்தேன். கல்யாணமே வேண்டாமென்று கண்டிப்பாய் சொல்லி விட்டேன். அப்பா மட்டும் "என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார். ஏதாவது பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்க்கிறேன் என்று கூறினேன். அதன்படி வேலையும் அமைந்தது. எனக்கு நானே துணையென்று பணி செய்தேன். அப்பொழுது ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு கட்டுரை போட்டி நிகழ்வதாகவும், அதில் தேறியவர் சபையில் நிர்வாக வேலைக்கு தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் பேப்பரில் செய்தி வந்தது. "உலக சமாதானம்" என்ற கட்டுரை எழுதி அனுப்பினேன். இரண்டுமாதம் கழித்து, என்னை 'சமூக நலன்' பாகத்தில் நிர்வாக வேலைக்கு தேர்ந்தெடுத்திருப்பதாகவும், வருஷம் ஆயிரம் டாலர் சம்பளம் என்றும், 'உடனே புறப்பட்டு வந்துசேரவும்' என்று விமான பிரயாண சீட்டுகளுடன் சமாசாரம் வந்தது.

அப்பாவிற்கு கட்டுக்கடங்காத மகிழ்ச்சி! அம்மாவிற்கு கண் காணாதநாட்டிற்கு மகளை அனுப்பப் போகிறோமே என்று ஒரே கவலை. ஊரிலுள்ளோர்களுக்கு இது ஒரு பரபரக்கும் செய்தி! விதவிதமாய் பேசிக்கொண்டார்கள். "இவளுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாரேன்" என்று யோக பலன் தேடுபவர்கள் கூறினார்கள்.

"இவளைஎப்படி தேர்ந்தெடுத்தார்கள்" என்று ஒரு பிரதர் கேட்க, மற்றவர் "பெண் என்றாலே எங்கும் அப்படித்தான் பிரதர். என்றைக்குமே எட்டுக்கு இருக்கிற மதிப்பு நாலுக்கு கிடையாது" என்று ஏதோ தத்துவத்தை நிரூபித்து கூறிவிட்டதாக அவர் முகத்தில் குறும்புப் புன்னகை மலர்ந்தது. அவரும் இந்தப் போட்டியில் கலந்து தோல்வி கண்டிருக்கவேண்டும்!

நகர முன்னேற்ற கழகத்தின் சார்பில் வழியனுப்பு உபசார விருந்து நடந்தது. அதில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் பட்டதாரிகள். பகட்டானஉடைகளுடன், போலிக் கௌரவ எண்ணங்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். உபசார சொற்பொழிவில் டாக்டர் திருவேங்கடம் எம். பி. பி. எஸ். பேச அழைக்கப்பட்டார். அவர்பேசிய பேச்சு என்னை ஆச்சரியத்தில் அமிழ்த்தியது.

"நம் நாட்டில் பெண்கள் கல்வி முன்னேறிவருவது குறிப்பிடத்தக்கது. அதுவும்தோழியர் கனகவல்லி பி. எ. ஐக்கிய நாடு

கள் சபையில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து இந்நகர மக்கள் நாம் எல்லோரும் பெருமை கொள்கிறோம். மேலும் இம்மாதிரி நம் ஊரில் பெண்கள், கல்வி கற்று பெருமையடையச் செய்வார்கள் என்று நம்புகிறேன். மேல்நாடு செல்லும் தோழியருக்கு என் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் என் வாழ்த்துக்கள். அவருடைய பெருமை ஓங்கி என்றென்றும் நம்நாட்டின்—ஏன் நம் நகரின் பெருமையை விளங்கச் செய்வாரென்றுநம்புகிறேன். வணக்கம்" என்று கரகோஷங்களிடையே முடித்தார்.

அவருடைய பேச்சை கேட்ட நான் சிரிப்பதா, கோபம் கொள்வதா என்று புரியவில்லை. உபசாரங்களுக்கு பதில் சொல்லும் கட்டம் வந்தது.

"நான் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தூண்டுகோலாக இருந்தவர் டாக்டர் திருவேங்கடம் என்றால் உங்களுக்கு—அவருக்கும் கூட—ஆச்சரியமாகத்தான் இருக்கும். படித்த பெண்களை ஒருதினம் ஏளனமாகப் பேசினார். அவருடைய அந்த சொற்கள் மறைந்த ஆசீர்வாதமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல. இந்த ஊரில் நிறைய பெண்கள் படிக்க வேண்டுமென்றார்! மேடையில் ஆதரிப்பதோடு மட்டுமல்ல, தன்னுடையவாழ்க்கையிலும் படித்த பெண்ணையே மணம் செய்து நிரூபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி மற்றும் சில வந்தன மொழிகள் கூறிமுடித்தேன்.

கூட்டம் முடிந்து பேசிக்கொண்டிருக்கையில் இருவர் பேசிக்கொண்டது என் காதில் பட்டது! "என்ன, சாமி, பெரிய வாயாடியாய் இருப்பாள்போல் இருக்கிறது! இவளைக் கல்யாணம் செய்துகொள்கிறவன் பாடு திண்டாட்டம்தான்" என்றான்.

அதற்கு மற்றவன் "அவள் தான் கல்யாணமே வேண்டாமென்று இருக்கிறாளே!"

"அப்படியாசங்கதி" என்றான்

"நான் படித்தகுற்றம்"என்று இருவரையும் பார்த்து சொல்லிவிட்டு அங்குநின்ற காரில் ஏறிப் புறப்பட்டேன்.

★

நடக்கும்!

மனைவி பார்த்து ஒரு காரியத்தைத் தன் கணவனிடம் சாதித்து முடிக்க முயன்றால், கட்டாயம் அதில் அவளுக்கு வெற்றியே கிடைக்கும்.

நடக்காது!

ஆனால் கணவன் மனைவியிடம் தான் கோரிய காரியத்தை முடித்துக்கொள்ள முடியாது. தோல்வி நிச்சயம்.

சுவைப் பெண்கள்!

— ரவி —

பழப்பெண்:
இளைக்கும் உடம்பின்
களைப்பை யகற்றும்மருந்து—நாவில்
களிப்பு கூட்டும் விருந்து—தோழி
சுளையினைப் பிழிந்த
ஆரஞ்சுச் சாற்றைநீ அருந்து!

மொழிப்பெண்:
அலுத்த உளத்திலும்
ஆண்மை கூட்டிடும் மருந்து—மகிழ்வு
அகத்தில் ஏற்றும் விருந்து—தோழி
களிதமிழ்ப் பாரதி
கன்னற் சாற்றைநீ அருந்து!

பழப்பெண்:
கொடியில் தொங்கிடும்
கண்கவர் திராட்சைக் கொத்து—அவை
உடலுறு திக்குநல் வித்து—தோழி
வடித்த சாற்றினைக்
குடித்துக் களிப்பாய் சித்தம்!

மொழிப்பெண்:
கொடியாம் அறிவினில்
கனிந்த கவிதைக் கொத்து—அவை
குமுறும் புரட்சியின் வித்து—தோழி
குடித்தே களிப்பாய்
பாரதி தாசனின் சித்தம்!

பழப்பெண்:
முக்கனி பழுத்ததும்
தோல்சிறி தின்றி நீக்கி—சுவைச்
சீனியும் பாலும் தேக்கி—தோழி
எக்களிப் புமிகும்
குடித்தால்! மாறும் ஏக்கம்!

மொழிப்பெண்:
எக்கவி யாயினும்
விருப்பு வெறுப்பினை நீக்கி—சுவை
மிக்க பண்ணிசை தேக்கி—தோழி
திக்கெலாம் இனிக்கும்
படித்தால்; மாறும் ஏக்கம்!

மங்களத்தின் மகிழ்ச்சி

— வில்லோரம் —

நகரில் நடக்கும் அக்கிரமங்களைக் கண்டுகளிக்கும் கல்நெஞ்சக்காரனைப்போலபூர்ணசந்திரன் கலங்கமின்றி பிரகாசித்துக் கொண்டிருந்தான் மதுரையின் பணத்திமிரை பிரதிபலிப்பது போல மின்சார விளக்குகள் கம்பீரமாகக் காட்சியளித்தது. இரவு 9½ மணி இருக்கும். மதுரை ஜில்லாபோர்டு ஆபீஸ்க்கு முன்னால் ஆற்றுப்பாலத்தின் மேலே ஒரு வாலிபப் பெண் கையில் குழந்தையுடன் நின்று கொண்டிருந்தாள். வயது 18க்கு மேல் 20க்குள் இருக்கும். அழகிய முகம் ஆனால் வறுமையின் சாயல். அவள் ஜில்லா போர்டு கட்டிடத்தின் அழகைப்பார்த்து மகிழ அங்கு வரவில்லை. யாரையோ எதிர்பார்ப்பதுபோல அங்குமிங்கும் தன் பார்வையை செலுத்திக்கொண்டு இருந்தாள். கையிலுள்ள குழந்தை அவள் தோள்மேல் தலையை சாய்த்து தூங்கிக்கொண்டிருந்தது. உண்மையில் அக்குழந்தை பசியால் வாடி சோர்ந்து கிடந்தது.

அப்பொழுதுஜனநடமாட்டம் அதிகமில்லையானாலும் வேலைஇல்லாத சோம்பேறிகள் அங்கொருவரும்இங்கொருவருமாக போய்க்கொண்டிருந்தார்கள். தூரத்திலுள்ள ஒரு ஹோட்டலிலிருந்து "என்ன உலகமடா" என்று கிராமபோன் ரிக்கார்டு அலரிக்கொண்டிருந்தது. ஒருவாலிபப் பெண் தனியாக நின்றுகொண்டிருந்தால் மதுரைப் பட்டிணத்தில் கேட்கவா வேண்டும்? போவோரும்வருவோரும் அவளை முறைத்து முறைத்து பார்த்தார்கள். அவள் யாரென்று தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆசை. அந்த ஆசை அவள்மேல் அநுதாபத்துடன் இருந்தால் சரிதான். ஆனால் அநுதாபத்துடன் நடித்து காமவேட்டையாடும் கயவர்களும் இருக்கிறார்கலல்லவா?

2

தினகரன் மில்லில் வேலைசெய்யும் ஏழைத்தொழிலாளி. அவன் மில்லில் வேலைக்கு சேர்ந்து நான்கு வருஷங்களாகிவிட்டன. அவனும் அவன் மனைவி மங்களமும் கோரிப்பாளையத்திலுள்ள குடிசைவீட்டில்தான் குடியிருந்தார்கள். அத்தம்பதிகளிடையே சண்டை என்பதை அண்டைவீட்டுக்காரர்கள் கண்டதில்லை. ஏன்? ஒருவருக்கொருவர் ஒங்கிப் பேசியதைக்கூட கேட்டது இல்லை. ஆகையால் அவர்களு

டைய வாலிப வாழ்க்கை இன்பமயமாக இருக்குமென நீங்கள் நினைக்கவேண்டாம். காட்டுப் பாதையில் கட்டை வண்டிப் பிரயாணத்தைப்போலவே அவர்கள் குடும்ப வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது.

தொழிலாளர்களின் நித்திய வாழ்க்கையை இடையனுக்குக் கீழுள்ள ஆட்டு மந்தைக்குதான் ஒப்பிடமுடியும். சிட்டுக்குருவி போல நினைத்தபொழுதெல்லாம் ஊடலும்கூடலுமாக இன்பத்தில் பறக்க முடியுமா? தொழிலாளர்கள் எந்த இன்பத்திற்கும் ஏங்கி நிற்கவில்லை. வயிறு வாடாமல் கஞ்சி கிடைத்தால் போதுமென்றுதான் நினைக்கிறார்கள்.

நம் ஏழைத் தம்பதிகளுக்கு சென்ற வருஷம் ஆண் குழந்தை பிறந்தது. தினகரனும் மங்களமும் குழந்தையிடம் ஓரே உயிராக இருந்தார்கள். குழந்தையின் துருதுருத்த செய்கையும், கலங்கமற்றமுகமும், கும்மாளச் சிரிப்பும் தம்பதிகளை இன்பத்தில் இழுத்தது. அவர்கள் மகிழ்ச்சியின் எல்லையை அடைந்தார்கள்.

இன்பத்தின் எல்லை துன்பத்தின் துவக்கம் என்று சொல்வதுண்டு. நம் ஏழைத் தம்பதிகள் விஷயத்தில் அது உண்மையாகி விட்டது. தினகரன் வேலைசெய்யும் மில்லில் வேலை நிறுத்த புகைச்சல் கிளம்பியது. தொழிலாளர் தலைவர்கள் கூடிக்கூடிப் பேசினார்கள். தலைவர்கள் கூட்டத்திற்கு நம்தினகரனும் அடிக்கடி போய்வந்தானும். இதுதான் அவன்செய்த குற்றம். அதற்கு ஏதுவாக இரண்டுநாள் காலையில் சரியான நேரத்தில் அவன் மில்லுக்கு வரவில்லை. கொஞ்சம் நேரம்கழித்துவந்தான். இதைக் காட்டி வேலையைவிட்டு நீக்கி விட்டார்கள் மில் நிர்வாகிகள். தேர்தல் காலத்தில் வேலை நிறுத்தம் வேண்டாமென தலைவர்கள் முடிவுசெய்தும் தினகரனை மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. என்ன செய்வான் ஏழைத் தொழிலாளி. அவன் தனியாள் அல்ல. மனைவியும் குழந்தையும் அவனை நம்பியிருக்கும்ஜீவன்கள். குழந்தைக்காக பெரிதும் கவலைப்பட்டான். கவலையுடன் வீட்டிலே அடைந்துகிடக்கவில்லை. வேலை தேடி பலயிடங்களில் அலைந்தான். அவனுடைய துர்அதிர்ஷ்டம் எங்கும் வேலை கிடைக்கவில்லை. வீட்டிலுள்ள சாமான்களை விற்பனைசெய்தும் அடகு வைத்தும் இரண்டு மாதத்தைக் கடத்திவிட்டான். அன்று வியாழக்கிழமை, வீட்டில் எல்லோரும் பட்டினி. பட்டினியால் வாடும் தன்மனைவியையும் குழந்தையையும் பார்க்க சகிக்காமல் மறுநாள் வீட்டிற்கு போகவில்லை.

வெள்ளிக்கிழமை காலையில் வீட்டைவிட்டுப் போன தினகரன் இரவு வெகுநேரமாகியும் வரவில்லை. நேரம்போகப்போக

மங்களத்தின் கவலை அதிகமாகியது. வெளியில் சிறிய சப்தம் கேட்டாலும் தன் கணவன் வருவதாக நினைத்து நினைத்து ஏமாந்தாள். உலகம் அறியாத குழந்தை நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்தது. சிறியவிளக்கு மினுக்மினுக்கென அரை ஜீவனில் எரிந்துகொண்டிருந்தது. அந்த மங்கிய விளக்கொளியில் குழந்தையின் முகத்தைப் பார்த்த மங்களத்திற்கு துக்கம் நெஞ்சை அழுத்தியது. இரவு வெகுநேரத்திற்குபின் தன்னையும் அறியாமல் வந்த தூக்கத்தில் அயர்ந்துவிட்டாள்.

காலை 6 மணிக்கு பயங்கர சொப்பனம் கண்டு விழித்தாள். இன்னும் கணவன் வரவில்லை. குழந்தை அழுகையுடன் எழுந்தது. நேரமாக ஆக பசியால் துடித்தது குழந்தை. பக்கத்து வீட்டுக்காரி உதவியால் பாலன் பசியடங்கியது. மாலை 5 மணியாகியும் தினகரன் வரவில்லை. மங்களம் பொறுமையை இழந்தாள். குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுவெளிக் கிளம்பினாள். பேதைப் பெண் மதுரைநகரில் எங்குபோய் தேடுவாள். அவள்மனம் நிலைகொள்ளவில்லை. கால்போன போக்கில் கணவனைத்தேடிப் புறப்பட்டாள். சுமார் நான்குமணிநேரமாக எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கடைசியாக ஆற்றுப்பாலத்திற்கு வந்துசேர்ந்தாள். அப்பொழுது இரவு மணி 9½ ஆகிவிட்டது.

எக்காலத்தும் மாருதலை

"கோபுர மார்க்"

தீப்பெட்டிகளே!

சைடு மருந்து

தண்ணீருக்குக் கலையாது.

50 டிக்கிரி பாரன் ஹீட்டில்

குச்சிகள் கழிவில்லாமல்

பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,

SIVAKASI.

Tel:- "SIMCO"

3

அவள் ஒவ்வொரு நிமிஷமும் தினகரனை எதிர்பார்த்தாளே யன்றி ரோட்டில் போவோரை வருவோரைப்பற்றி கவலைப்பட வில்லை. போவோரும் வருவோரும் அவளை முறைத்து முறைத்துப் பார்த்தார்களேதவிர யாரும் அவளிடம் பேசவும் இல்லை. ஆனால் தல்லாகுளத்திலிருந்து ஒரு குதிரை வண்டி அவள் பக்கத்தில் வந்துநின்றது. வண்டிக்காரனைத்தவிர வண்டியில் யாருமில்லை.

"எங்கே அம்மா போகவேண்டும்" என கேட்டான் அவன்.

"என் வீட்டுக்காரர் நேற்று வீட்டைவிட்டுப் போனவர் வரவில்லை. அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் மங்களம்.

"வீடு எங்கே இருக்கிறது?"

"கோரிப்பாளையத்தில் குடியிருக்கிறோம்"

"சினிமா கொட்டகை, ரயில்வே ஸ்டேஷன் எல்லாம் தேடிப் பார்த்தாயா?"

"இல்லை, என்னால் நடக்க முடியவில்லை"

"வண்டி அந்தப் பக்கம்தான் போகிறது. பாவம்! வேண்டுமானால் ஏறிக்கொள்" என்று அன்போடுசொன்னான்வண்டிக்காரன்

ஏழைப்பெண் அவன் வார்த்தையை நம்பினாள். வண்டியில் உட்கார்ந்தாள். வண்டியும் புறப்பட்டது. யானைக்கல் வரும்வரை அனுதாபத்துடனே வண்டிக்காரன்பேசினான். மங்களம் நடந்த விஷயங்களை உடன் பிறந்தவனிடம் சொல்வதைப் போலவே அவனிடம் சொன்னாள். வண்டி சிம்மக்கல்லை தாண்டியது. நிலவு காலமானபடியால் 10 மணிக்கு வீதிவிளக்குகள் அணைக்கப்பட்டன. விளக்குகள் அணைந்த உடன் மங்களத்தின் மனதில் இருள்சூழ்ந்தது. உள்ளத்தின் குழப்பநிலைகள் பின்வரும் அதிர்ச்சிக்கு முன் எச்சரிக்கையாகவுமிருக்கலாம்.

சிம்மக்கல்லை தாண்டியதும் வண்டியின் வேகம் குறைந்தது. மாலையில் வீடு திரும்பும் உழவு மாட்டைப்போல சின்ன நடையில் போகும் குதிரையின் சலங்கை சப்தமும் ஓய்ந்துவிட்டது. ஏதோ சினிமா பாட்டை முணுமுணுத்து வந்த வண்டிக்காரன் திடீரென்று தன்பாட்டை நிறுத்தி "உன்பெயர் என்ன?"என்று கேட்டான். அவன்மறுமுறையும் கேட்டபின்புதான் "என் பெயர் மங்களம்" என்று சொன்னாள்.

"மங்களம்! நான் ஒன்று சொல்லுகிறேன் அதன்படிநடந்தால் உனக்கு நல்லது. சாப்பாடும் போடுகிறேன். செலவுக்கு ரூபாயும்..." என்று சொல்லிக் கொண்டே பின்னால் நகர்ந்து அவள் கையைப் பிடித்தான். மங்களம் "ஹா" என்று அலறி கையை உதறி, மூழ்ந்தையுடன்

கீழே இறங்கினாள். இரண்டு நாள் ஆகாரமே அருந்தாத மங்களத்திற்கு உடம்பில் தெம்பில்லை. பாவம் பதட்டத்தில் கால்தவறி கீழே விழுந்துவிட்டாள். குழந்தை வீரிட்டு அழுதது. நல்ல வேளையாக அப்பொழுது கார் ஒன்று வந்தது. காரின் வெளிச்சத்தில் பெண்ணின் பரிதாபநிலைமையைப் பார்த்த டிரைவர் காரை நிறுத்தினார். காரின்பின்னால் உட்கார்ந்திருந்தவர் கதவை திறந்து கீழே இறங்கினார். மங்களம் கஷ்டத்துடன் எழுந்து "காப்பாற்றுங்கள்" என கத்திக்கொண்டு அவர் பக்கத்தில் ஓடினாள். அவர் "என்ன நடந்தது; யார் நீ?" என்று கேட்டார். முதலில் மங்களத்தால் எதுவும் பேச முடியவில்லை. பின்பு இடை இடையேவிம்மிக்கொண்டு தன் கதையை சொன்னாள். அதற்குள் வேறு சிலரும் கூடிவிட்டார்கள்.

4

இரவில் ரோந்து போகும் போலீஸ்காரர்களுக்கு அரைப் பயித்தியங்களைக்கண்டால் ஆனந்தம். கூட்ஸ்செட் தெருவில் தள்ளாடித் தள்ளாடி போய்க்கொண்டிருந்தவனை நம்போன்றவர்கள் பார்த்தால் ஏதோ பயித்தியமென ஒதுங்கிப் போய்விடுவோம். ஆனால் அவனுக்கு பின்னால் வந்த இரண்டு போலீஸ்காரர்கள் அவனிடம் பலவித கேள்விகளைக் கேட்டார்கள். அவன் அப்பொழுதுள்ள நிலைமையும், அவன் பதில்சொல்லிய தன்மையும் போலீஸ்காரர்களுக்கு சந்தேகத்தைஉண்டாக்கியது. அவனை போலீஸ்ஸ்டேஷனுக்கு கொண்டுபோகும் நோக்கத்தில் வரும்போது, காரும் அதைச் சுற்றிச் சிலரும் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார்கள். தங்களுக்கு வேட்டைகிடைத்ததென நினைத்து வழியில்பிடித்த அரைப் பயித்தியத்துடன் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அரைப் பயித்தியம் கூட்டத்தின் நடுவில் நின்ற பெண்ணைப் பார்த்து "மங்களம் நீயா? எங்கு வந்தாய்" என்றான். "உங்களைத் தேடித்தான்" என்றாள் அவள். தினகரனுக்கு அதற்குமேல் ஒன்றும்பேசமுடியவில்லை. தன் குழந்தையைவாங்கி அதன் முகத்தைப் பார்த்து அழுதான். காரில் வந்தவரிடம் "இவர்தான் என் கணவர்" என தினகரனைக் காண்பித்தாள் மங்களம். அவன் அப்பொழுதுதான் காரில் வந்தவரைப் பார்த்தான். தன் எஜமான் என்பதை அறிந்தான். "எஜமான் நமதுமில்லில் என்னை இரண்டுமாதத்திற்குமுன் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள்" என்றான். எஜமான் உடனே துண்டுசீட்டில் ஏதோ எழுதி அச்சீட்டையும், பாக்கட்டிலிருந்து பத்து ரூபாய் நோட்டையும் எடுத்து அவன்கையில்கொடுத்து "இதை செலவுக்கு வைத்துக்

கொண்டு திங்கள்கிழமை இந்த சீட்டை காண்பித்து வேலையில் சேர்ந்துகொள்'' என்றுசொல்லி சந்தோஷத்துடன் காரில் புறப் பட்டார்.

எல்லாவிஷயங்களையும் அறிந்த நம் போலீஸ்காரர்கள் குதிரை வண்டிக்காரனை பதம் பார்க்க ஆளைத் தேடினார்கள். வண்டி நின்றது ஆனால்வண்டிக்காரனைக் காணோம். அவர்கள் வண்டிக் காரனைப் பிடித்து இனி என்ன செய்வார்களோ! வேலையுடன் புருஷனும் கிடைத்துவிட்டபடி யால் மங்களத்தின் மகிழ்ச்சி எல்லை கடந்துவிட்டது. கட வுள்தான் குதிரைவண்டிக்கார னாக வந்து நல்லபடி சேர்த்து விட்டதாக எண்ணுகிறாள் மங்களம்.

காமுகனை கடவுளாக எண்ணு வது பேதமையுடன் பெருந் தன்மைகலந்துவிட்டதுபோலும். ஆனால் என் நண்பர் சொல்லுகி றார் "கடவுளைப்பற்றிய தவறான கருத்துக்கொள்பவரைவிட, கட வுளைப்பற்றி கருதாதவரே கவுர வமானவர். பிந்தியவர் நம்பாத வர்மட்டுமே, முர்தியவர்கடவுளை அவமதிப்பவர்'' ★

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணாக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினாவிடை
என்ற புஸ்தகம்
எங்களிடம் கிடைக்கும்.
விலை: சாதா பைண்டிங்
ரூ 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

1, 3, 5, 7, 14, 20 பவுண்டு டின்களில் காபி பவுட
சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.
சிக்கரி கலந்த காபி பவுடரும் கிடைக்கும்.
எட்வர்ட் காபி ஒர்க்ஸ், விருதுநகர்.

★ ஆடிப் பண்டிகை! ★

[R. P. மல்லாரி, திருவனந்தபுரம்]

"ஆடிப்பாலு போல மச்சான்
அன்பு பொங்க வேணும்.
ஓடிப் போகாமல் நான் பார்த்து
உள்ளம் குளிர வேணும்
பண்டிகைக்கு வந்த மச்சான்
(என்னைப்) பார்த்துப்
பேசுவாரோ?
கண்டகரம் தந்த மச்சான்
கண்ணை வீசுவாரோ?"

பாடிக்கொண்டிருந்தகல்யாணி யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பினாள். அவள் மச்சான் கன்னையன் நின்றுகொண்டிருந்தான்.

கன்னையன் 'கலகல'வென சிரித்தான்.

அவள் தலைகுனிந்தாள்.

"நான் இங்கே வந்து நிக்குறது, உனக்குத்தான் கண் தெரியலே" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தான். அவள் பாடியபாட்டைக்கேலிசெய்தான்

ஒரு அரை நிமிஷங்கூட ஆகியிருக்காது. "மாப்பிள்ளை! மாப்பிள்ளை!" என்று மாமனாரின் குரல் கேட்டது. பின்னால், யாரோ 'தடதட'வென மாடிப்படி ஏறிவந்தார்கள். அவன் மாமனார்தான்! தந்தைவருமுன் கல்யாணி எங்கோ சிட்டாக ஓடி மறைந்தாள்.

"என்ன மாப்பிள்ளை! இங்கே தனியா என்னசெய்றீங்க, இன்னும் சாப்பிடாமே? பண்டிகையும் அதுவுமா பசியோடவா...?"

வாக்கியத்தை முடிக்காமல் அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்தார். கன்னையன் அவர் பின்னாலேயே மாடிப்படி இறங்கினான். "ஹூம்! என்ன பண்டிகை கொண்டாடவேண்டியிருக்குது" என்று முணுமுணுத்தது, ஒளிந்து நின்று, தன் கணவன் படும் அவஸ்தையைக் கண்டு பெருமிதத்தால் பூரிப்படைந்த கல்யாணியின் கூரிய செவிகளில் மட்டும் விழுந்துவிட்டது.

* * * *

ஆடிப் பண்டிகை விருந்து அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது எல்லோரும் வேடிக்கையாகவும் தமாஷாகவும் பேசிக்கொண்டிருந்தார்கள். ரேஷன் வேறு எடுபட்டுப் போனதால், சாப்பாடுவகையறுக்கள் எல்லாம் பலவகையில் குவிந்திருந்தன. சாப்பாட்டுக்கு நடுவே மாப்பிள்ளையைப்பற்றி பரிகாசப் பேச்சுக்கள்.........

"நம்ம கல்யாணிக்குத் தகுந்தவர்தான் மாப்பிள்ளையும்..."

'வாயாடிக்குத்தகுந்தவாயாடி!'

ஏதோ பெரிய ஹாஸ்யம்போல ஓரே சிரிப்பு!

"வாயாடிப் பண்டிகை வச்சுப் பாருங்களேன்" மாப்பிள்ளை கன்னையன்.

"அப்படி வாயுள்ள பிள்ளையாத் தெரியலையே—டம்ளர் தேங்காய்ப்பாலு அப்படியே இருக்குதே" மாமனார்.

"மாப்பிள்ளைன்னு அப்படித்தான் முறுக்கோட இருப்பார்" இன்னொரு சாப்பாட்டு ராமர்.

இப்படி சாப்பாடு நடந்தது. கன்னையனுக்கு ஞாபகம் முழுவதும் அவன் கல்யாணியின்மேல் தான். இந்தப் 'பாவிகள்' எல்லோரும் சேர்ந்து, அவளோடு சரியாக இரண்டு வார்த்தைகூட பேச விடவில்லை மாமனார் வீட்டில் புது துணிகள் எல்லாம் வாங்கிக் கொடுத்து, உடுத்திக் கொண்டு, சாமியைக் கும்பிடச் சொன்னார்கள். ஆனால், அவனுடைய அன்றைய சாமி? கன்னையனும் கொஞ்சம் குத்தலாகவே பேசினான். "துணிமணி அவனுக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சாம்! உடம்பை விடவே இல்லையாம்"

"கொஞ்சம் டைட்டா இருக்குதல்ல; அதுக்கு மாப்பிள்ளையோட ஹாஸ்யம்!" ஒரு அதிர்வேட்டு சிரிப்பு. என்ன ஹாஸ்யம் வேண்டிக் கிடக்குது? கடைசியில் வருவது வரட்டும் என்று மாடிக்கேசென்றான். கல்யாணி மெய்மறந்து பாடிக்கொண்டிருந்தாள்;

"ஆடிப்பாலு போல—நம்
அன்பு பொங்க வேணும்—இந்தக்
கோடித்துணியைப்போல—உறுதி
கூடி வாழ வேணும்
வெள்ளிக் கோப்பைபோல—நாம்
வெள்ளை மனசு கொண்டோம்
உள்ளிருக்கும் பால்போல—
இன்பம்
உள்ளம் நிறைய வேணும்"

மெதுவாகச் சென்றவன் 'ஆடிப்பாலுபோல' என்ற அவளுடைய பல்லவியில் தானும் சேர்ந்துகொண்டான். ஒருநிமிடம் இருவரும் உலகம் மறந்து வாய்விட்டுச் சிரித்தார்கள்.

சிரிப்பின்எதிரொலிகூட ஓய்ந்திருக்காது. மாமனார் வந்தார்.

"ஹே...ஹே!.மாப்பிள்ளையா? வாங்க..."

கன்னையனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பாவி வந்துவிட்டாரா?

"இல்லே...நீங்க நேரத்தோட கிளம்பினு.?" மாமனார் தொடர்ந்தார்.

"ஏன்?" எரிச்சலாகக் கன்னையன் கேட்டான்.

"அதில்லே...உங்களுக்கு ஊர்லே எவ்வளவோ ஜோலி இருக்கும்......"

"அதெல்லாம்ஒன்னுமில்லீங்க ...ஹி...ஹி...ஒரு நாலு நாள் ஹாய்யா தங்கலாம்......"

மாமனார் என்ற அந்த 'ஜந்து'

“மகிழ்ச்சி”
ஆண்டுச் சந்தா
(தபாலில்)
ரூ 3—0—0
தனி இதழ்
ரூ. 0—4—0

விலகிப்போனால் போதும் என்ற ஒரே எண்ணந்தான் அவனுக்கு.

“ஆனா, ஆடிப் பண்டிகைக்கு வந்தா, அன்னிக்குச் சாயந்திரமே கிளம்புறதுதான் நம்ம ஊர் வழக்கம்...”

“நல்ல ஊருங்க, விருந்தாளியை விரட்டி அடிக்கிற வழக்கத் தோட......”

“கோவிச்சுக்காதிங்க மாப்பிள்ளே! பாருங்க...நீங்க சின்னவயசு தானே இதெல்லாம் தெரிஞ்சுக்க பிராயம் ஏற்படவில்லே. வழக்கத்துக்கு மாறு செய்யலாமா? ஆவணி முதல் தேதியே கல்யாணியை உங்க வீட்டுலே கொண்டாந்துவிட்டுடுறேன்”

இதுக்குள் “வண்டி கட்டியாச்சு” என்று ஒரு குரல் வந்தது. மாப்பிள்ளே ஊருக்குப் போக வேண்டும். பெண்கள் எல்லோரும் ஆற்றங்கரைக்குப் போகவேண்டும்! அவர்களுக்குப் பிரிலும் கொண்டாட்டம். இவனுக்கோ?

* * * *

வண்டி அசைந்து அசைந்து போய்க்கொண்டிருந்தது. அன்று நடந்தவை எல்லாம் சினிமாக் காட்சிபோல் கன்னையன் மனத் திரையில் ஓடிமறைந்தன. இது ஒரு ஸ்டண்ட்படமா? ஸ்டண்ட் படங்களில் என்னவோ, கதாநாயகனுக்கு கதாநாயகி அவசியம் கிடைப்பாள். சமூகப் படமாக இருந்தால் ஒருவேளை ஏதோ தியாகம் என்று சொல்லி ‘குளோஸ்’ செய்துவிடுவார்கள். இதையெல்லாம் எண்ணிப்பார்க்க அவனுக்கு உள்ளம் நிறைய மகிழ்ச்சி. கல்யாணி அவன் கல்யாணிதானே! எங்கே போய் விடுவாள்? இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்று அவன் எண்ணிக்கொண்டே இருக்க, மைல் கற்களும் தாண்டிச் சென்றுகொண்டு இருந்தன. பிரிவிலும் மகிழ்ச்சி!

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

[வாழ்க்கைத் தொடர்புள்ள கேள்விகளைக் கேளுங்கள் ஆனால் ஒருவர் சுருக்கமாக 2 கேள்விகளே கேட்கவேண்டும் அனுவசியமான கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதற்கில்லை.]

எஸ்.எம் யாகூப், சிந்துவார்பட்டி.

நானும் ஒரு இந்துப்பெண்ணும் சகோதர முறையில் பழகுகிறோம். ஆனால் ஊரார் கள்ளக்காதலர் என்று கூறுகின்றனர். ஊருக்குப் பயந்து அவளோடு நான் பேசாமலிருக்கலாமா?

உண்மையிலேயே நீங்கள் களங்கமற்று அப்பெண்ணின்மீது சகோதரி வாஞ்சையுடன் பழகி இருந்தாலும் அப்பெண்ணின் வருங்கால நல்வாழ்வில் அக்கறை உள்ளவரானால், அச்சகோதரிக்கு அவச்சொல் வாராமல் தங்க்க விலகிக்கொள்வது நல்லது.

N. S. K. நாதன்,
கீழப்பார்த்திபனூர்.

லலிதா, பத்மினி என்சிநேகிதர் கல்யாணத்துக்கு நாட்டியம் ஆட வருவார்களா? பீஸ்என்ன ஆகும்?

வருவார்கள்—சாதாரணமாக ஏழைகள் நடத்தும் 20 கல்யாணச் செலவு, இந்த இருவரின் மூன்று மணி நேர ஆட்டத்திற்கு பீஸ் ஆகலாம். அவர்களுக்கே எழுதிக் கேளுங்கள்.

மா. இராமசாமி, மதுரை,

வயதுவந்த ஆண்களுக்கு ஒரு நல்லஒழுக்கம்கூறவேண்டுகிறேன்

பிற பெண்களை உடன்பிறந்த சகோதரிகளாக எண்ணி செயலாற்றுங்கள்.

ஆண்களுக்கு பெருமை தேடிக் கொடுப்பது எது?

"ஒழுக்கம் விழுப்பம் தாலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்ற வள்ளுவர் வாக்குப்படி ஒழுக்கம்தான் எல்லோருக்கும் பெருமை கொடுப்பது.

கதர்சட்டைக்காரன், தூத்துக்குடி.

திருமணத்தன்று மனைவி கணவனைப்பற்றி என்ன நினைப்பாள்?

உலகிலுள்ள இன்பம் பூராவும் தன் கணவன் உருவில் திரண்டு, உருண்டு தன்னை வந்தடைந்ததாக நினைப்பாள்.

நம் நாட்டில் தாஸிகள் எப்பொழுது ஒழிவார்கள்?

நாடு இருக்கும்வரை, ஆடவர்கள் இருக்கும்வரை அவர்கள் ஒழிய மாட்டார்கள்.

ம. மதுரம், மதுரை.

பராசக்தியில் 'கத்திரிக்கோல்' கையாளப்பட்டதா?

கத்திரிக்கோலுக்குத் தப்பி எந்தப் படமும் வெளிவந்தது இல்லை.

'பராசக்தி' மூலக் கதை, திராவிடர் கழக பாவலர் பாலசுந்தரர் தானா?

அவரேதான்

சுந்தரம், கொழும்பு.

விபசாரம் பெருகுவதேன்?

வறுமையினால்

ஆர். செல்லத்துரை, மதுரை.

திறமை என்பது எது? திறமையை அளக்கும் அளவுகோல் எது?

ஒருவர் தான் எடுத்த காரியத்தை சாதுர்யமாக எண்ணியபடி முடித்துக்கொள்வதே திறமை என்பது. அவரது வாழ்க்கைப் பாதையின் ஏற்றத் தாழ்வுகள்தான் அதற்கு அளவுகோல்

வாழ்க்கை என்பது ஒரு சுவை நிறைந்த நாவலைப் போன்றது என்று காண்டேகர் கூறுகிறார். இது உண்மையா? எப்படி?

இல்லை ஒரு நாவலை ஒருவர் படித்து முடித்தபின், அதே நாவலை திரும்பத்திரும்ப ஒவ்வொருவராகப் பிறர் படித்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் ஒருவரின் நிகழ்ச்சி, மற்றொருவருக்கும் அதே நிலையில் ஏற்படும் என்று எப்படிக் கூற முடியும்?

மூர்த்தி, தஞ்சை.

சினிமாவுக்கு ஏற்றாற்போல் நான் கதை, வசனம் எழுதியுள்ளேன். அக் கற்பனையை எப்படி சினிமா உலகத்தில் புகுத்துவது?

இக்கேள்வியை என்னிடம் கேட்க முற்பட்டதிலிருந்தே உங்கள் திறமை தெரிகிறது! நீங்களே முதல்போட்டு ஒரு படம் எடுக்க நேர்ந்தால்தான் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

'வீராங்கர்கள்' என்னும் காரணப்பெயர் தமிழிலே இருக்கிறதா

'வீரர்கள்' என்றுதான் தமிழில் உண்டு.

V. ரத்தினம், விருதை.

குடும்பப் பெண்கள் குறித்து அபாண்டமாக பழிசுமத்தி மொட்டைலட்டர் எழுதும் முத்தண்ணக்கள் சிக்கிக்கொண்டால் அவர்களை என்ன செய்வது?

முச்சந்தியில் கட்டிவைத்து கண்டவரெல்லாம் காறியுமிழும்படி செய்வது ஏனையோருக்கு எச்சரிக்கையாக இருக்குமல்லவா?

ஆர். ராமசாமி, புதுஆயக்குடி.

ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு வேறொருபெண்ணைத் திருமணம்செய்துகொள்ளுகிறார்களே, காரணம் என்ன?

காதல் கட்டுப்பாடற்றது. இடம், பொருள், ஏவலின்றி பற்றிக்கொள்ளும். ஆனால் கல்யாணம் என்பதற்கு பெற்றோர், உற்றார் கட்டுப்பாடு இருக்கும். அவர்களை உதறி சுய முயற்சியில் சுதந்திரமாக வாழ கையாலாகாதகாரணத்தாலும் இந்நிலை நேரலாம்.

படித்த பெண்ணோடு படிக்காத ஒருவன் கல்யாணம் செய்து கொண்டு தனிக் குடும்பம் நடத்தினால் என்ன ஆகும்?

குடி ஒன்றும் மூழ்கி விடாது. கொஞ்சகாலம் மனைவியிடம் 'டூசன்' எடுத்துக்கொள்வான். ஏன், படிக்காத பெண்ணைக் கட்டிக்கொண்டு எத்தனையோ பேர் உயர்ந்த வாழ்க்கை நடத்தவில்லையா? ஆண்களை விடபெண்களேசாமர்த்தியசாலிகள்

வே. சேதுராமலிங்கம், உடுமலைப்பேட்டை.

நாத்தீகத்தார் என்றுகூறி கடவுள்உள்ள கோவிலில் காமத்தால் தங்களது கருத்தைஇழந்து கண்ட

காரிகைகளின் அழகை விலைபேசி வரும் வேதாந்திகளை என்னவென்றழைப்பது?

கோவில், குளம் எந்த இடமானுலென்ன காமத்தால் கருத்திழந்தவன் எவனுனுலும் வெறிநாயே!

எதிர்கால இளைஞர்களை இம்சிக்க உயர்தரப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி.யில் வடிகட்டும் முறையை புகுத்திய சர்க்கார் எந்தநோக்கத்தில் அதனை புகுத்திஇருப்பார்கள்?

கல்வியில் கண்ணும் கருத்தும் உள்ளவர்களுக்கு இதில் சர்ச்சைக்கே இடமில்லை. "நான் எந்தப்பள்ளியிலாவது நுழைந்து, இங்கு முதல் மார்க் வாங்குபவன் யார்? என்று கேட்டால் 'திராவிட மாணவன்' என்று பதில் வரவேண்டும்" என்று அறிஞர் அண்ணு கூறுகிருர். அவர் கூற்றுப்படி எல்லோரும் முதல் மார்க் வாங்கவேண்டுமென்ற முன்னேக்கோடு பாடங்களைப் பயின்று வந்தால், பாஸ்மார்க்கைப்பற்றி கவலைப்படவேண்டிய அவசியமேஇல்லை. அப்போதைக்கப்போது படிக்க வேண்டியதை விட்டுவிட்டு, ஆட்ட பாட்டங்களில் திரிந்து, பரீக்ஷை நேரத்தில் இரவுபகலாக கண்விழிப்பவர்கள்தான் இப்பிரச்சனையில்முன் நிற்பார்கள் என்ருல்கூட மிகையாகாது.

டி. செல்வரத்தினம், தூத்துக்குடி.

நெசவாளிகளை குடும்பம் குடும்பமாக பிச்சை எடுத்துத் திரியும்படியான அவல நிலையை உண்டாக்கியது மேலிடமா? கீழிடமா?

நாம்தான். அவர்களது ஆக்கவேலைகளை விலை ஏற்றத் தாழ்வைக் கவனியாது வாங்கி உபயோகித்து வந்திருந்தால் அவர்களது வயிற்றுப் பாட்டிற்கு வழி இருந்துகொண்டே இருந்திருக்கும்

அ. சோணை, மதுரை.

சமதர்மம் மெய்யாகவேபோரை ஒழித்துவிடுமா? அல்லது அங்ஙனம் கூறுவது ஒரு பிரச்சாரக் கூச்சல் மட்டும்தானு?

சரித்திரகாலம்தொட்டு எக்காலத்தில் சண்டைஇல்லாமல் இருந்திருக்கிறது? அன்று சமதர்ம மகான்கள் பிரச்சாரம் செய்யாமலா இருந்தார்கள்?

வாழ்க்கையானது யாருக்கு வேடிக்கையானது?

பணம் படைத்தோர்க்கு

தொழிலுக்கும், கலைக்கும் என்ன வித்தியாசம்?

முன்னது ஊதியத்தை நாடுவது. பின்னது உற்சாகத்தில் திகழ்வது.

'பண'த்தில் டி. ஏ. மதுரம்

53ம் 84ம் வருக! வருக!

சங்குசாமி

வருக! வருக! வளம்பெற வருக!
பெருகும் மகிழ்ச்சி பொங்கிட வருக!
கன்னலும் செந்நெலும் கனிகள் பலவும்
உண்ணவே விளைத்து ஓங்கிட வருக!

ஓரா யிரமும் ஒன்பது நூறும்
ஐந்து பத்தும் அதிலொரு மூன்றும்
ஒன்ருய்ச் சேர்ந்து ஊர்ந்திடும் ஆண்டே
என்றும் இன்பம் எய்திட வருக!

ஒன்றும் ஒன்பதும் எட்டும் நான்கும்
என்றே நான்கு எண்கள் அமைந்த
வான்புகழ் கொண்ட வள்ளுவர் ஆண்டே
தேன்மழை பொழிந்து சிறந்திட வருக!

நாடு நலமுற மாடாய் உழைத்து
காடு திருத்தி கழனிகள் வெட்டி
பாடு படுவோர் பசியால் துவண்டு
வாடும் வறுமை மடிந்திட வருக!

ஆடை நெய்யும் வேலையும் கொண்டோர்
வாடையில் கிடந்து வதங்கும் நிலையும்
பஞ்சப் பிணியும் பட்டினிச் சாவும்
நெஞ்சக் குமுறலும் நீங்கிட வருக!

சாதி சமயச் சழக்குகள் அழிந்து
நீதியாய் மக்கள் நீடு வாழவே
அன்பும் அறனும் பண்புறு கல்வியும்
குன்ருச் செல்வமும் கொழித்திட வருக!

வாய்மொழி வள்ளுவர் வழிப்படி நடக்க
ஆய்வுரை கூறும் அறிஞரைப் போற்ற
தாய்மொழி தமிழும் தரணியில் செழிக்க
பாய்ந்து வந்திடும் பகைமை யகற்ற
தூய்மை பெற்றுத் தோன்றி வருகவே!

காதற் கதையுமல்ல! கற்பனைச் சித்திரமுமல்ல!

நிகழ்ந்த சம்பவம்!

[மகிழ்ச்சி சதானந்தம்]

தண்ணீரானது தான் இருக்கும் பாத்திரத்திற்குத்தக்கவாறு அல்லது தங்குமிடத்திற்குத்தகுந்தவாறு உருவடைகிறது என்று கூறுவர்; அதுபோலதான், ஒருவருடையகுணமும், நடையுடை பாவனை, பழக்க வழக்கங்களும்அவரைச்சுற்றியுள்ள சூழ்நிலைக்குஏற்ப அமைகிறது என்று கூறினல் மிகையாகாது என்றே கருதுகிறேன்.

சீனி கலந்த பால் இனிக்கும்; உப்புக்கலந்தபால் கரிக்கும். இதில் யாருக்கும் சந்தேகமிருக்காது. அதுபோல நல்லவர்களுடையசினேகம் நற்காரியங்களிலும், தீயோருடைய நட்பு கேட்டையும் விளைவிக்கும் என்றும் கூறலாம்.

கவர்ச்சிமிக்க பொருள் எதுவானலும், பெட்ரோலில் பாயும் தீப்போல, மனிதரின் மனதைப்பற்றி இழுக்கவல்லனவாகும். ரோஜாவிற்கு முள் இருந்தாலும், அதன் அழகும், மணமும், நம்மைகவர்ந்துவிடவில்லையா? அதேபோல அழகுள்ள பெண் ஆடவர் கண்ணிட்படும்பொழுது, அவள் அன்னியன் மனைவியானலும், பார்ப்பவன்கருத்தை எட்டத்தான் செய்கின்ருள். கவர்ச்சியுள்ள ஆடவன், பெண்ணின் உள்ளத்தைத் தொடத்தான் செய்கிருன். அதை இருபாலாரும் மனதிற்குள் சிறிதுநேரம்ரசிப்பதில் குற்றம் நேராது; ஆனல் அதை சாஸ்வதமாக எண்ணும்போதுதான் தவறுக்குக் காரணமாகிறது.

எல்லோருக்கும் இனிமையாகப் பாட வராது—அல்லது பாடவே தெரியாது—ஆனல் கேட்டு ரசிக்க முடிந்தவர் எண்ணற்றபேர் உண்டு. சிலருக்குக்கூட்டங்கள், திருவிழாக்களைக் கண்டாலே காத வழிக்கு அப்பால் ஓடுவார்கள். ஆனல் பலர், பதினைந்து நாட்களுக்குமுன்பேஅவ்விழா 'என்று வரும், அன்று அங்கு இருக்கவேண்டும்' என திட்டம் தீட்டிச் சென்று கண்டு களிக்கிருர்கள். இவை எல்லாம், சூழ்நிலையால் ஏற்பட்ட மனித சுபாவம் என்றே கருதுகிறேன்.

* * * *

"நாங்கள் நான்கைந்து நண்பர்கள் திருவாரூரிலிருந்து 30-11-52 ஞாயிற்றுக்கிழமை—ஓய்வு நாள் என்றபடியாலும், திருக்கார்த்திகைமகோர்ச்சவத்தைக் காணவும் சுவாமியைத் தெரிசிக்கவும் அதிகாலையில் 'சிக்கல்' செல்ல முடிவு செய்திருந்தோம். 'சிக்கல்' திருவாரூர் நாகபட்டிணம் ரயில்மார்க்கத்தில், திருவாரூரிலிருந்து 13 மைலில் உள்ள ஊர். நாகபட்டிணத்திலிருந்து நான்குமைலுக்கு முந்திய ஸ்டேஷன். ஏற்கனவேயே அன்று 'சிக்கல்'செல்வதென்று முடிவு செய்திருந்தோமானலும், இரண்டு தினங்களுக்கு முன்பிருந்தே அரசாங்கத்தினரின் வானிலை ஆராய்ச்சிச் செய்திப்

யடி 'வங்காளவிரிகுடாவில் உருவாகிய புயல் மேற்கு நோக்கித் திரும்பி வந்துகொண்டிருப்பதால் நாகபட்டிணம், காரைக்கால் பகுதிகளில் கரையைக் கடந்து வீசலாம்' என்ற எச்சரிக்கையை எண்ணி சிறிது மலைப்பு ஏற்படத்தான் செய்தது எங்களுக்கு.

நாகபட்டிணம் துறைமுகத்திலெல்லாம் அபாய அறிவிப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, கப்பல் படகு முதலியவைகளின் போக்கு வரத்தும்கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதும் தெரியும். முந்திய நாட்களுக்குமேல் காற்றும் சற்று அதிகமாகவே அன்று வீசிக்கொண்டிருந்தது. மழையும் லேசாகப் பெய்து கொண்டிருந்தது.

முன்வைத்த காலை பின் வைக்காத வீரத் தமிழர் மரபிற் தோன்றிய சிங்கங்கள் இக் காற்று மழைக்கெல்லாம் சிந்தித்தால், ஆண்டுக்கு ஒரு முறையே நிகழும் திருக்கார்த்திகைத் தெரிசனம் காண முடியுமா? அப்படிப் புயலே வந்தாலும், 'ஆட்வர்கள் தானே! சமாளித்துக்கொள்ள முடியாமலா போய்விடும்?' என்ற துணிவுடன் அதிகாலை வண்டிக்கே புறப்பட்டுவிட்டோம்.

ரயில் 'சிக்கல்' நோக்கிபோய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு மைலாக ரயில் முன்னேறிக் கொண்டிருந்தது போல், காற்றின் வேகமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டே வந்தது. காற்றின் வேகத்தைத் தாங்க சக்தியற்ற சிலர் வண்டியின் ஜன்னல் கதவுகளை மூட முற்பட்டார்கள். ஆனால் அதிகரித்து வரும் காற்றின் வேகத்தைக் கண்ட நாங்கள் அவ்விதம் ஒருபுறக் கதவை அடைப்பதால் தான் ஆபத்து வெகு எளிதில் உண்டாகும் என்பதை உணர்ந்து அவ்விதம் அடைப்பதைத் தடுத்து விட்டோம். வண்டியின் வேகமும் கொஞ்சம்கொஞ்சமாக தடைபட்டுக்கொண்டே வந்தது.

வண்டியும், அடியக்கமங்கலம், கூத்தூர், கீவளூரி தாண்டிச் சென்று கொண்டிருந்தது. அடுத்து வரும் ஸ்டேஷன் தான் 'சிக்கல்'. சீரி எழுந்து கொண்டிருந்த காற்றுக்கிடையே 'சிக்கல்' ஸ்டேஷனையும் அடைந்து விட்டது வண்டி. நாங்களும் இறங்கினோம் மழையும் பெய்துகொண்டுதானிருந்தது.

எங்களிடையே 'காற்றும் மழையும் தானே' என்ற சாதாரண எண்ணம் தான் இருந்ததே யொழிய, மிகைப்பட எங்கள்மனதில் ஒன்றும் தோன்றவில்லை. காற்றடிக்கும் திக்கை அனுசரித்து குடையை அப்படியும் இப்படியுமாக சரித்துச் சரிக்கட்டிக் கொண்டே கோவிலை அடைந்தோம். சுவாமி தரிசனமும் செய்தோம்.

காற்றின் வேகம் ஒரு மாதிரியாக அதிகரித்துக் கொண்டே வருவதை அறிந்து, போட்டிருந்த

வேறு புரோக்கிராம்களை ரத்து செய்துவிட்டு உடனே திருவாரூர் திரும்பிவந்து விடுவது என்ற எண்ணத்துடன் பழையபடி ஸ்டேஷனை நோக்கி விரைந்தோம். ஆனால் இப்பொழுது, முன்போல் குடையைப் பிடிக்கமுடியவில்லை. காற்று சிறிது சுழன்று வீசத் தொடங்கியது. ஸ்டேஷனுக்குச் செல்லும் வழியில் திருவாரூர் செல்லும் பஸ் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்ததால், இனி ஸ்டேஷனுக்கு அவ்வளவு தூரம் சிரமத்துடன் செல்லவேண்டாம் என்ற கருத்துடன் எல்லோரும் பஸ்ஸில் ஏறிவிட்டோம். பஸ்ஸில் வேறுபல பிரயாணிகளும், பெண்கள் சிலரும் இருந்தார்கள். பஸ்ஸும் புறப்பட்டது.

'சிக்கலை' விட்டு கார் இரண்டு மைல்தான் வந்திருந்தது. காற்று புயலாக மாறி சுழன்று சுழன்று மிக வேகமாக வீசத் தலைப்பட்டது. அப்பொழுது திடீரென்று டிரைவர் பிரேக்போட்டார். உள்ளிருந்தவர்கள் கூட ஒருவரோடொருவர் மோதிக்கொள்ள நேர்ந்தது. கார் நின்று விட்டது. என்ன என்று எட்டிப் பார்த்தபொழுது ஒரு பெரிய மரம், அப்பொழுதுதான் ரோட்டின் குறுக்கே வேருடன் பிடுங்கப்பட்டு விழுந்துகொண்டிருந்தது. கார் டிரைவரின் முன்ஜாக்கிரதையால் நாங்கள் தப்பினோம். கார் மேற்கொண்டுசெல்வது தடைபட்டது அப்பொழுது மணி காலை 10. ஆடவர்கள் எல்லோரும் இறங்கி மரத்தை எப்படியாவது இழுத்து ஒதுக்குவது என்று முயன்று கொண்டிருந்தோம். எங்கள் முயற்சி அவ்வளவு எளிதானதல்ல என்றாலும் முயன்று கொண்டிருந்தோம். அப்பொழுது திருவாரூரிலிருந்து சிக்கல் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றும் எதிரே வந்து நின்றது. மரம் மிகவும் பெரியதானதாகையாலும் அகற்றும் முயற்சி வீண் என்று தோன்றியதாலும் எல்லோருமாக ஒரு முடிவிற்கு வந்து, ஆட்களை மாற்றி ஏற்றிக்கொண்டு, வந்த திசையிலேயே கார்கள் திரும்புவது என்று முடிவுசெய்து, எங்கள் காரிலிருந்தவர்கள், அந்தப் பக்கம் நின்றகாரிலும் அதிலிருந்தவர்கள் எங்கள் காரிலுமாக மாறினோம்.

மாறி ஏறி எங்கள் கார் புறப்பட ஆயத்தமாக திருப்பிக் கொண்டிருக்கும்போதே அந்தப் பக்கமும் முன்னேற முடியாதபடி மேலும் ஒரு பெரிய மரம் வீழ்ந்தது. இனி அந்தக் கார் புறப்படுவது சாத்தியமில்லை என்ற நிலை வந்து முயற்சி கை விடப்பட்டது.

பழையபடி முதலில் ஏறிய காரிலேயே ஏறி, சிக்கலுக்கே திரும்பி விடுவது என்று விரைந்து கொண்டிருந்தோம். ஆனால் அந்தப்பக்கமும் இரண்டு, மூன்று மரங்கள் நெடுக விழத்தொடங்கி

விட்டது. சிக்கலுக்குச் செல்ல முடியாமலும் திருவாரூருக்குத் திரும்பஇயலாமலும் பெரும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டு விழித்தோம். மழைவேறு பெய்துகொண்டிருந்தது. காற்றின் கோரமோகூறந்தரமன்று. நல்லவேளை காரின்மீது ஒரு மரமும் விழவில்லை. மரம்எதுவும்விழுந்து பாதிக்காத இடத்தில் காரை டிரைவர் நிறுத்தி வைத்து விட்டார்.

'கீவலூர்' ஒரு மைல் தான் இருந்ததால், குறுக்குப்பாதையில் நடந்து ரயில்வே ஸ்டேஷனை அடைந்தால் அங்கிருந்து ரயில் ஏறி திருவாரூர் போய்விடலாம் என்றுநினைத்தோம். 'ரோட்டில் தானே மரம் விழுந்து மறிக்கிறது, ரயிலுக்கு அந்தத்தடங்கல் இல்லையல்லவா' என்ற எண்ணம் தான் தோன்றியதேதவிர, வேறு மாற்று எண்ணங்கள் ஒன்றும் உதிக்கவில்லை.

காரைவிட்டு இறங்கி சிறிது தூரம் நடந்தோம். ஆனால் ஒரு அடி எடுத்து வைப்பதுகூட பெரும்பிரயத்தனமாகஇருந்தது. காற்றின் வேகமோ சொல்லி முடியாது. கீழே மழைநீர் ஓட்டம் வேறு. எனவே கீவலூர் ஸ்டேஷன் போகும்முடிவு அப்பொழுதே கைவிடப்பட்டு மறுபடியும் காரையே தஞ்சமடைந்தோம். காற்றிற்கு கார் ஆடிய ஆட்டம் பீதியைக் கொடுத்துக் கொண்டே இருந்தது.

முன்னால் ஒரு பர்லாங் தூரத்தில் ஒற்றைக் கடை ஒன்றும் அதைச்சுற்றி பத்து பதினைந்து சிறு வீடுகளும் தென்பட்டன. அங்காவது சென்று ஒதுங்குவது என்று முடிவு செய்தோம். மேலும் மதியம் ஆகிவிட்டபடியால் பசி வேறு ஆரம்பித்து விட்டது. நாங்கள் இறங்கி, ஒருவரோடொருவர் கைகளைப் பற்றிக்கொண்டு கிளம்பினோம். காரில் சில ஆடவர்களும், பெண்களும் இருந்தார்கள்.

இச்சமயம் ஒரு சம்பவம் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. நாங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உயிரைக்காப்பாற்றிக்கொள்ள வகை தேடிக்கொண்டிருந்தோம், ஆனால் வண்டியில் வந்த பெண்களில் சிலர், அவர்களை மறந்து 'வீட்டில் குழந்தைகளை விட்டு விட்டு வந்தோம். என்ன ஆனதோ' என்று புலம்ப ஆரம்பித்து விட்டார்கள். பெண்களின் பெருந்தன்மையை-தியாக சீலத்தை—அங்குதான், அந்த கொடும் ஆபத்திலும் கண்டேன். நாங்கள் ஒருவார்த்தை சொன்னால் போதும், எங்களுடன் கிளம்பி விடுவார்கள்போல் தோன்றியது அப்பொழுதைய அவர்களது பிள்ளைப்பாசம் — குடும்பப்பற்று.

நாங்கள் மெதுவாக மரம் மட்டைகளைக் கடந்து சென்று ஒரு வீட்டுத் திண்ணையில் போய் தங்கினோம். ஏற்கனவேயே அவ்

வீட்டின் கூரை ஓடுகள் எல்லாம் காற்றில் பறந்து விட்டன. வீட்டினுள் ஒரு ஓரத்தில் இரண்டு மூன்று பேர் ஒண்டிக்கிடந்தார்கள், புயலின் வேகமோ நிமிஷத்துக்குநிமிஷம் மிகக்கடுமையாகிக் கொண்டிருந்தது. மணியும்இரண்டிற்குமேல் ஆகிவிட்டது. பசி வேறு பிடுங்கியது. சற்று தூரத்தில் இருந்த கடைக்குச் சென்று ஏதாவது இருந்தால் வாங்கிச் சாப்பிடலாம் என்று நான்கு எட்டுத்தான் போட்டிருப்போம், 'திடும்' என்று கேட்டுத் திரும்பினோம். அந்தக் கோரக்காட்சியை என்னென்று கூறுவது? நாங்கள் ஒதுங்கி இருந்த வீடு அப்படியே விழுந்து அமுங்கி விட்டது. இன்னும் ஒருநிமிடம் நாங்கள் அங்கு தாமதித்திருந்தாலும்......அதை நினைக்கவே பயவாக இருக்கிறது. வீட்டினுள் இருந்தவர்கள் அத்துடன் ஐக்கியமாகி விட்டார்கள்.

மண் சுவராகையால், காற்றுடன் கலந்த மழைநீர் சுவற்றைப் படிப்படியாக அரித்துக் கொண்டே வந்து இக் நிலையை உண்டாக்கி விட்டது போலும். சில கதைகளில் படித்திருக்கிறோம் ஆனால் இவ்வித சம்பவங்களை நாங்கள் நேராகவே கண்டோம்.

கடைக்குள் நுழைந்தோம். அங்கு ஆள் இல்லை. கண்ணாடிப் பெட்டிக்குள் ஏதோ சில வடை, சுண்டல் தென்பட்டது. பொரி கடலையும் இருந்தது. கடைக்காரன் இருக்கிறானா என்று அறிய கூப்பிட்டோம். அவன் அருகில் இருந்த ஒருகாரை வீட்டிலிருந்து சத்தம் கொடுத்தான். பின் அவனை அழைத்து சிலவற்றை வாங்கித்தின்றோம். அந்நேரம் அந்த பலகாரங்கள் அமிர்தமாகத் தென்பட்டது. அவனிடம் காரில்உள்ள ஆட்களிடம் கொண்டு சென்றால் நன்கு விற்கும் என்று கூறினோம். அவன் "போதும் போதும் விற்றது. யாருக்கு வேண்டுமானாலும் இங்கு வரட்டும். இது மண்கட்டிடம் என்று நானே அடுத்த இடத்தில் சென்று குந்திக்கொண்டிருக்கிறேன்" என்றான். மண் கட்டிடம் என்று அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் நாங்கள் நடையைக் கட்டிவிட்டோம், எதிரே இருந்த காரைக் கட்டிடத்திற்கு.

நேரம் சென்று கொண்டே இருந்தது. புயலின் வேகம் கொஞ்சம்கூட குறைவதாக இல்லை. பொழுது போவதற்குள் எப்படியாவது கிவலூர் சென்று விடவேண்டுமென்று விரும்பினோம், அங்கு சென்றால் தெரிந்தவர்கள் வீடு இருப்பதால் அங்கு சௌகரியமாகத் தங்கிக் கொள்ளலாம் என்ற நினைவால்.

ஒருவரோடொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டோம். மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து, மரங்களை நெருங்காமல் சென்றுகொண்டிருந்தோம். அப்பொழுது தலைக்கு மேலே 'அல்லாவுதீன் கதையில் வரும்

பறக்கும் மந்திரப்பாய்போன்று முழுத்தகரம் ஒன்று பறந்ததைக் கண்டோம். இவை ஒவ்வொன்றையும் காணக்காண எங்கள் மனப்புயல் எல்லையைத் தாண்டிக் கொண்டிருந்தது.

அதற்கு எற்றாற்போல்நாங்கள் முன்னேறிச் சென்று கொண்டிருந்த ரோட்டு ஓரத்தில் ஒரு எருமை மீது ஒரு பெரிய மரம் விழுந்து அது உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்தது. அதைக் கண்டு அனுதாபப்படும் நிலையில் தான் நாங்கள் இருந்தோம்.

வழி நெடுக நாங்கள் கண்ட காட்சி சொல்லத் தரமன்று. தென்னந்தோப்புகளும்,வாழைத் தோட்டங்களும், ஒன்று பாக்கி இல்லாமல் சாய்ந்து கிடந்தன.

ஒரு வழியாக இரவு 7—30 மணிக்கு நிவலூர் வந்து சேர்ந்தோம். அங்கு நண்பரின் வீட்டை அடைந்தபோது அங்கு அவர் இல்லை. வெளியூர் சென்றிருப்பதாக அறிந்தோம். வீட்டில், பெண்களும், சிறுவர்களும் பயத்தால் ஒண்டி, ஒளிந்து கொண்டிருந்தார்கள். மேல் மாடியில் இருந்த ஓட்டுக்கூரை, பின் கட்டில் மாட்டுக் கொட்டத்திற்காக போடப்பட்டிருந்த தகர ஷெட் பூராவும் பிய்த்தெரியப்பட்டிருந்தது.

சிறிது நேரத்தில் பண்ணையாள் கணக்குப் பிள்ளையைக் கூட்டி வந்தான். அவர் எங்களுக்கு அவர்களது மில்லில் இடம் சௌகரியம் செய்து கொடுப்பதாகக் கூறவே, அவர்பின் சென்றோம். அங்கு சென்றுபார்த்தால் அதன் அலங்கோலம்சொல்லிமுடியாது

சுமார் 10, 12 ஆயிரம் மூடைகள் வரை அடுக்கக் கூடியதாக இருந்த இடத்தின் தகரஷெட் பூராவும் திருகி எறியப்பட்டு, ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் காட்சி கொடுத்துக்கொண்டிருந்தது. ஆபீஸ் ரூமாக இருந்த பக்கா கட்டிடம் மட்டுமே தப்பி எங்களுக்கு தங்க இட வசதி அளித்தது.

ஆகார வசதிகளை அவர்களே தயார் செய்து கொடுப்பதாகக் கூறினார்கள். வந்த அலுப்பாலும், மனப் பீதியாலும், அப்படி அப்படியே படுத்துத் தூங்க ஆரம்பித்தோம்.

சுமார் இரவு மணி 11 இருக்கும், எங்களை எழுப்பிசாப்பிடச் சொன்னார்கள். இரவு 10 மணிக்கெல்லாம் புயல் அடக்க ஆரம்பித்து விட்டதாக அவர்கள் வாயிலாகக்கேள்விப்பட்டோம். நன்கு சாப்பிட்டுவிட்டு, பழையபடி சற்று நிம்மதியுடன் படுத்துத் தூங்கினோம்.

அதிகாலையில் எழுந்து விடைபெற்று ஊருக்குப் புறப்பட்டோம். நேராக ஸ்டேஷனுக்குச் சென்றோம். ஸ்டேஷன் இருந்த இடம் தெரியாமல் உருமாறி இருந்தது. தந்தி மரங்கள் ஒடி

ருவது நேராக இல்லை. வளைந்து கிடக்கும் அல்லது சாய்ந்து கீழே கிடக்கும்.

முதல் நாள் 'சிக்கல்' ஸ்டேஷனில் நின்ற வண்டிகள் தண்டவாளத்தை விட்டு, கீழே புரட்டப்பட்டுவிட்டன என்ற செய்தியும் நாங்கள் கேள்விப்படாமல் இல்லை. நடைமார்க்கம் தவிர வேறுமார்க்கம் இல்லாதபடியால், அவ்வழியையே கடைப்பிடித்தோம்.

பாதையில் புயலின் கோரத் தாண்டவத்தை நேரில் அனுபவித்துக் கண்ட காட்சிகள் வார்த்தையில் அடங்குபவன அல்ல. திருவாரூர் அடைந்து எங்கள் விடுதி சென்றோம். விடுதி பக்கா கட்டிடமானதால் சேதாரமொன்றுமில்லையானாலும், பின்னால் போடப்பட்டிருந்த தகர ஷெட் அப்படியே ஐந்து வீடுகளுக்கு அப்பால் தூக்கிஎறியப்பட்டிருந்தது. நின்ற தென்னை மரங்கள் பூராவும் காலி நல்ல வேளையாக எங்கள் உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லையாதலால் உங்களுக்கு என் சொந்த அனுபவத்தைக் கூற முடிந்தது. மற்றபடி ஆங்காங்கே நிகழ்ந்த சேதாரங்கள் பற்றி பத்திரிகைகளில் படித்திருப்பீர்களே" என்று கூறி முடித்தார் எனது நண்பர், சமீபத்தில் வீசிய கோரப் புயலில் சிக்கி மீண்ட தனது சொந்த அனுபவத்தை.

take home a NEW
Remington
PORTABLE TYPEWRITER
for an initial payment of Rs. 125
pay balance monthly.
V. V. DHANUSHKODI
NADAR & SONS,
P. B. No. 2,
TUTICORIN.

சென்ற இதழில் "அன்பு மனைவிக்கு..." என்று 'மதுரை வாசி' எழுதிய தபாலுக்கு 'மதராஸ்வாசி' பதில்கொடுக்கிறார்

பிரியமுள்ள கணவருக்கு......

— தாரா —

உங்கள் அன்பானகடிதம்கிடைத்தது. நான் என் தாய் வீட்டிற்கு வந்து மூன்று நாட்கள்தான் ஆகிறது. அதற்குள் நான்கு பக்கம் கடிதம் எழுதுவீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. தாங்கள் என்னுடன் சினிமாவுக்கு வராத காரணத்திற்காகமட்டும் நான்பிறந்தகம் வந்துவிடவில்லை; வேறு சில காரணங்களும் உண்டு.

உங்கள் நண்பர் தணிகாசலம், தன் மனைவி இறந்த அன்று கதறிக் கதறி அழுததைக் கண்டு எல்லோரும் கலங்கினோம் ஆனால் அவர் மனைவி இறந்த இரண்டாவது மாதமே மறுமணம்செய்ததற்கு தாங்கள் முக்கிய காரணமாக இருந்தீர்கள். என் பழைய தோழி பார்வதி தன் கணவன் இறந்த எக்கத்தில் உடல் நலம் குன்றி நான்கு மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். அவள் வைத்திய செலவுக்கு பத்து ரூபாய் கொடுத்து தங்களிடம்சொன்னேன் தாங்கள் என் செய்கைக்கு சந்தோஷப்படாமல் 'உம்' என்று இருந்து விட்டீர்கள்.

நம் கலியாணமான புதிதில் என்னை எவ்வளவோ நேசித்தீர்கள். எனக்காக பூ வாங்கி வந்து உங்கள் கையாலேயே என் தலையில் பல தடவைசூட்டினீர்கள். நான்வீட்டு வேலை செய்துகொண்டிருந்தாலும் என்னைவிடாமல் வந்துவந்து பேசிக்கொண்டிருந்தீர்கள். இப்பொழுது நானாக வந்து பேசினாலும் முன் போல் சிரித்த முகத்துடன் பேசுவதில்லை ஏதோ சாக்கு சொல்லுகிறீர்கள். நீங்கள் சினிமாவுக்கு கூப்பிட்டபொழுதெல்லாம் நான் வரவில்லையா? நான் சினிமாவுக்கு கூப்பிட்ட அன்று 'அலுப்பாயிருக்கிறது' என்றீர்கள். அப்பொழுது 'என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?' என்று கேட்டேன். அதற்கு நீங்கள் மௌனம் சாதித்தீர்கள்.

வீட்டிலேஅடைபட்டுக் கிடக்கும் மனைவிக்கு புருஷனை விட்டால் வேறு என்ன இருக்கிறது? நீங்களே என்னை அலட்சியம் செய்தால் நான் வருத்தமோ அல்லது கோபமோ அடைவது சகஜம்தானே? என் கோபத்தை நாகப் பாம்பிற்கு ஒப்பிட்டு எழுதியிருக்கிறீர்கள். என்னை எதுக்கு வேண்டுமானாலும் ஒப்பிடுங்கள்; திட்டுங்கள்; அடியுங்கள். ஆனால் என்னிடம் மௌனத்தைமட்டும்காட்டவேண்டாம். தாங்கள் திட்டினால்கூட அழகாய்த்தானிருக்கும். தங்கள் கையால் அடிபட்டாலும் ஒரு இன்ப உணர்ச்சி எற்படும்.

நாம் சிலகாலம் விலகியிருந்தால் தங்கள் மனம்மாறி என்மேல் தங்களுக்கு பழைய அன்பு எற்படும் என

நினைத்தே தாய்வீடுவந்துசேர்ந்தேன் வந்த இரண்டாவது நாளே என் எண்ணம் சிதறிவிட்டது. என் மனம் மாறிவிட்டது. தங்கள் முகத்தை எப்பொழுது பார்ப்போம்என்ற ஒரே கவலையாக இருக்கிறது. தங்களைப்பற்றிய சிந்தனையில் சரியாக சாப்பிட முடியவில்லை. இரவு தூக்கமே வருவதில்லை. தாய்வீடு வந்தது தப்பு, தப்பு என மனச்சாட்சி என்னை வதைக்கிறது. தங்களிடம் மன்னிப்பு கேட்க உடனேபுறப்பட முடிவு செய்தேன். ஆனால் என் தாயார் ஒரு வாரம் இருந்துதான் போகவேண்டுமென பிடிவாதமாக கெஞ்சுகிருள். என் தகப்பனுரும் தங்களுக்கு கடிதம் எழுதுவதாக சொன்னுர். என்னைப் பெற்று 16,17 ஆண்டுகள் வளர்த்த பெற்ருேர்கள் வார்த்தைகளை தட்ட முடியவில்லை. ஒருபக்கம் காதல்—மறுபக்கம் கடமை—இவைகளிடையே தத்தளித்துக்கொண்டுஇருக்கும்பொழுது தான் உங்கள் கடிதம் கிடைத்தது.

உங்கள் கடிதத்தை எத்தனையோ தடவைகள் படித்துவிட்டேன். படிக்கும்போதெல்லாம் தாங்கள் பக்கத்திலிருப்பதுபோல உணர்ச்சி ஏற்படுகிறது. கடைசியாக நான் கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும் சமயம் என் தம்பி வந்துவிட்டான். வெடுக்கென பறித்து அவனும் படித்தான். அவன் ஒரு சுட்டிப்பயல்என்பது உங்களுக்குத்தான் தெரியுமே! கடிதத்தைப் படித்த பின்பு என்னை "காந்தக்கல்லே, வானம்பாடியே" என்று கேலிசெய்கிருன். ஆகையால் இனி எழுதும் கடிதத்தில் என்னை இப்படிஎல்லாம் வர்ணிக்கவேண்டாம். தவிர கலியாணத்திற்கு முன்பு நடந்த நம் சந்திப்புகளைப்பற்றி பலதடவை பேசிவிட்டோம். திரும்பவும் கடிதத்தில் எழுதலாமா? அதைப் படிக்கும்போது எனக்கு வெட்கமாக இருக்கிறது.

உங்கள் கடிதத்திலிருந்து நீங்கள் என் அழகை அதிகம் விரும்புவதாக தெரிகிறது. ஆனுல் நான் உங்கள் அழகை மட்டுமல்ல, உங்களையே விரும்புகிறேன். இன்னும் ஒரு விஷயம். நான் பத்துப் பதினைந்து தினங்களுக்குமுன் அடிக்கடி மயக்கமாகவருகிறது என்று உங்களிடம் சொன்னேனே, அந்த மயக்கத்திற்குக் காரணம் உங்களுக்குத் தெரியுமா? கூடிய சீக்கிரம் நேரில் வந்து சொல்லுகிறேன்.

இப்படிக்கு,
தங்களையே நம்பியிருக்கும்
கமலா.

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி'யின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிரும்.

த. தம்பித்துரை—நியூஸ் ஏஜண்ட்,

நெ, 226, ஆஸ்பத்திரி ரோடு, :: யாழ்ப்பாணம். (சிலோன்)

இது நிஜமா?

— வாகன் —

தொட்டில்

தாயின் தாலாட்டுதலில் தூங்குகிற குழந்தையின் முகத்தில் பரிபூரண அமைதி காணப்படுகிறது. குடும்பம் என்பது தொட்டில்!

—ஒரு நர்ஸ்

சீர்திருத்தம்

கல்யாண வாழ்க்கை சீர்திருத்து கிறசிறைக்கூடம்! தப்பிஓடவிடாது தடுக்கின்ற பூட்டுகள் குழந்தைகள்.

—ஒரு மைனர் பள்ளி ஆசிரியர்

காதல்

காதல் பட்டா இல்லா நிலம். காதல் திசையறி கருவி இல்லா கப்பல்.

—ஒரு வக்கீலும், மாலுமியும்

அமைதி

காதல்—கடல்; அங்கு அலைகள் ஓயுமா? வாழ்க்கை என்ற படகை அஞ்சித்தான் செலுத்தவேண்டியதாகவே இருக்கிறது.

—ஒரு படகோட்டி

வீடு

காதல்என்ற வெளிச்சத்தின்முன் கலியாணம் குறுக்கிட்டால்தான் வீடு என்ற நிழல் நிரந்திரமாகிறது.

—ஒரு பௌதீக ஆசிரியை

உரைகல்

கலியாணம்—தங்கம். காதல்—பித்தளையின்மேலேறிய தங்கமுலாம் இதில் தங்கக்கட்டி எடுக்க புடம் போட்டால் களிம்பு வாடைதான் வெளிவருகிறது

—ஒரு காசுக்கடைக்காரர்

தேவை

வாழ்க்கையே ஒருபூந்தோட்டம். அதன் காவலாளன் கணவன். அவனுக்கு தேவையான ஊதியம் காதல்

—ஒரு தோட்டக்காரன்

அமைப்பு

இயற்கையினுலேயே பெண்கள் பலஹீனமாக்கப்பட்டிருக்கிறார்கள்; அபயத்திற்காக காதல் அமைந்துள்ளது. ஆனால், தற்காலத்தில் காமம் தலைவிரித்தாடுகிறது; அதனால் அபாயமே அதிகரித்துவருகிறது.

—மிஸ்டர் அடைக்கலம்

முறை

ஆணும் பெண்ணும் தனித்தனி ஸ்வரங்கள் மாதிரி. இந்த ஸ்வரங்கள் இல்லாவிட்டால் வீணை இல்லை. காதல்வீணைபோன்றது. முறைதவறி மீட்டப்பட்டால் கம்பி அறுந்து போய்விடும். —ஒரு வீணைக்காரி

வசீகரம்

கலியாணம் பொறி போன்றது. இலகுவில் உள்ளே நுழைந்துவிடலாம். வெளிவருவது சிரமம். வசீகரிப்பது காதல். அது விரைவில் இரையாகிவிடுகிறது.

—மிஸ்டர் கலியாணசுந்தரம்

முன்னேற்றம்

தேர்தல்களில் தனித்தொகுதி தவிர பொதுத்தொகுதியிலும் ஆண்களுடன் போட்டியிட முன்வருகிறார்கள் பெண்கள். அதனால்தான் முன்போல் இப்பொழுது ஆண்களுக்குப் பின்னால் நடந்து வருகிறதில்லை போலும்! —மிஸ்டர் நடராஜன்

அருமை

தகப்பனைக் காட்டிலும் தாயிற்குதான் குழந்தைகளின் அருமை தெரியும். ஆனால் சென்னை கல்விச் சட்டம் 33வது சரத்தின்கீழ் தகப்பன் இறந்தபின்தான் தாய் தன்குழந்தைகளை பள்ளியில் சேர்க்க விண்ணப்பத்தில் கையெழுத்திடலாமென்று இருப்பது ஏனோ?

—ஒரு ஆசிரியை

சக்தி

காற்று வீசப்படாதபோது பங்காவின் அசை காற்று நலகு உணரப்படுகிறது வெளியுலகில் அதிகம் பழகாதவர்களுக்கு கிரகிக்கும் சக்தி அதிகம். —ஒரு ப்யூன்

பலம்

பெண் நாக்கு பலமுள்ளது. அதனால் ஆண்கள் பயப்படுகிறார்கள்.

—திருமதி பேச்சியம்மாள்

3வது போட்டி பரிசுக் கட்டுரை

வனிதையர் வாழ்க்கையில் வழுக்கி விழுவதேன்?

[V. N. A. ஹமீத், இராயகிரி]

"மகிழ்ச்சி"யின் மார்கழி இதழ் மனதைக் கவர்ந்து இன்ப ஒளி வீசியது. ஆனால் இந்த மகிழ்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டார்போல் கலக்கமும் சிக்கலும் நிறைந்த காரிகையரின் கலங்கிய குப்பையைக் கிளப்பி குண்டுமணியைத் தேட வைக்கிறார். வேதனையை சிந்தனையாகமாற்றி வனிதையர்வாழ்க்கையில் வழுக்கி விழுவதேன்? என்று கேட்டு சிதறிக் கிடந்த சிந்தனையைகூர்மையாக்கி வாருங்கள் அழகிய அணங்கையர் வாழ்க்கையை சீர்திருத்த என்று அழைப்பதுபோல்தோன்றுகிறது

வாழ்க்கையில் வனிதையர் வழுக்கி விழுவதேன்? என்ற வினாவுக்கு ஹங்கேரியப் பழமொழியும், ருமேனியப் பழமொழியும், என் சிந்தனையில் தோன்றிய சிறியக் கருத்தும் விடையளிக்கும். "செத்த பிறகுதான்பெண்களுக்குஞானப் பல் முளைக்கிறது" இது ருமேனியப் பழமொழி. எனவே வனிதையர் வாழ்க்கையில் வழுக்கி விழுவதற்குக் காரணம் பருவ காலத்தில் தங்கள் மனதைக் கட்டுப்படுத்தாது காட்டுராணி போல்விடுவதும், வாழ்க்கையின் வருங்காலத்தைப்பற்றி சிந்திக்காததும். ஒருஆடவனைக் காதலிக்கும்போது அவனின் குணத்தையும், கருத்தையும், கொள்கையையும், செய்கையையும் கவனியாது அவனது அழகிலும், வர்ணஜால வார்த்தைகளிலும் மயங்கி மனதைப் பறிகொடுத்து பருவ தாகத்தைத் தீர்த்துக்கொள்ளக் கருதி ஆண்களின் லீலைகளில் சிக்குண்டு தங்கள் வாழ்க்கையை வரண்ட பாலைவனமாக்கிக்கொள்கிறார்கள். இவ்வாறு வாழ்க்கையில் வருங்காலத்தை சிந்திக்காமையால்தான் ருமேனியர் அவ்வாறு கூறினர்.

"ஒரு பெண்ணை சிந்திக்க வைப்பதைவிட நடனமாடவைப்பது சுலபம்" இது ஹங்கேரியர் பழமொழி. பெண்களை பருவ காலமும், மனதிடமின்மையும், ஆண்களின் அழகும், பெண்கள் ஆண்களின்ஆசைவார்த்தைகளில் தங்கள் மனத்தை ஏமாற்றிக் கொள்வதாலும், அசட்டு ஆண்களின் ஆசையாலும், பணக்காரரின் பணத்திமிரினாலும், வறுமை

கட்டுரைப் போட்டி 4

வாழ்க்கைத் துணை

பரிசு ரூ 2

இரண்டுபக்கங்களில் அமையும்படி 25-1-53க்குள் எழுதியனுப்புக.

யின் கொடுமையாலும், அனங்கியர்க்கு உகந்த உரிமையளிக்காத (குருட்டு) ஆட்சியாலும், புதுமையை உணராத பழைய பெருச்சாளிகளின் குருட்டுச் சமூகத்தாலும், பெண்களின் மனதிற்கேற்ற மணவாளனைத் தேர்ந்தெடுக்க உரிமையளிக்காமையாலும், சுற்றமும், சூழ்நிலையும் பெண்களைப் பேதளிக்கச் செய்து வாழ்க்கையைவிட்டு நழுவச்செய்து விடுகின்றன என்பது தான் எனது கருத்து.

பெண்கள் தங்கள் பருவகாலத்தில் தங்கள் மனதைத் திடப்படுத்தாததும், சிந்திக்காமையும் பெண்கள் குற்றம். ஆனால் அவளது முட்டாள் சமூகம் மனத்திற்கேற்ற கணவனை அடைய அவளுக்கு சுதந்திரமளிக்காது ஜாதியென்னும் இரும்புத் திரையிட்டு அவளது ஆசைக்கு விலங்கிடுவதாலும்தான் கட்டிய கணவனிருந்தும் மாற்றானை மனதில் நினைந்து அவனை விரும்பி அவனிடம்போய் அவளது இச்சையைப் பூர்த்திசெய்கிறாள். இவ்வாறுசெய்வதை சமூகமும் கணவனும் கைவிட்டு பழித்துஇழித்துக் கூறப்பட்டு வேதனைக்குளத்தில் வீழ்ந்து வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்கிறாள். இவ்வாறு அவள் வாழ்விலிருந்து நழுவியதற்குக் காரணம் காரிகையா? சமூகக் கட்டுப்பாடா? வேண்டிய உரிமை இல்லாததா?

இன்று நாட்டிலே பாருங்கள் எங்கும் வறுமையின் கொடுமை. இவ்வறுமையால் வந்தவினைதான் எத்தனையோ ஏழைப் பாட்டாளிகளின் பெண்கள் தங்கள் வயிற்றுப்பாட்டின் பொருட்டு உடலை அடகு வைத்து வாழ்க்கையை நடத்தநேரிட்டுள்ளது. இதற்கு யார்காரணம், ஏழைப்பெண்ணா? பணத்தை கட்டிப்போட்டு வைத்திருக்கும் பணக்காரன் குற்றமா? அல்லது இந்தக் கொடுமைகளையெல்லாம் கண்டுகளித்துக்கொண்டு வறுமையைப் போக்க வழி தேடாத அரசியலார் குற்றமா? இத்தனை ஊழல்கள் மலிந்து கிடக்கும் இந்நாட்டில் வனிதையர் வாழ்க்கையில் வழுக்கி விழாமல் என்ன செய்வார்கள்?

பணம்

பட விமர்சனம் ★ "டிடெக்டிவ்"

ஒரு காங்கிரஸ்காரர்:-

என்ன ஸார்! 'பணம்' படம் பிரமாதமாயிருக்கும் அப்படீன்னு யாரோ சொன்னதைக்கேட்டு போனா ஒரேகண்றாவியாயிருக்கு! தீனா...மூனா...கானா அறிவினை பெருக்கிடும்.. எங்கள் பெரியார் ...எங்கள் அண்ணா... தி. மு. க. மாநில மாநாடு இதையெல்லாம் காட்டுறான்களே! சே....சே.... சென்சார் போர்டு இப்போதெல்லாம் தூங்குகிறது போலிருக்கிறது. சே...சே...ரொம்பமோசம் நாம்இருவர்லே, தியாகபூமியிலே, ஏழைஉழவன்லேயெல்லாம் காங்கிரஸ் கொடியை காண்பிச்சாங்க அதிலே அர்த்தம்இருந்தது. இதிலே தி.மு.க.கொடியை கொண்டு வர்ராங்களே! என்ன தைரியம் இந்த டைரக்டருக்கு! மொத்தத்திலே படம் எப்படியிருக்குன்னு கேட்டு எங்க'வம்ச' வயித்தெரிச்சலைக் கிளப்பாதீங்க ஸார்! கம்பெனியே'நொடிச்'சிடும்போலிருக்கு

ஒரு பக்தன்:-

அரகரா...!! 'பராசக்தி' வந்து உயிரை வாங்குறதுபத்தாதுன்னு இந்த 'பணம்'.வேறேவந்தா உயிரை வாங்கணும்? நம்ப மானம் போகுதே! சீர்திருத்தமாம், மறுமணமாம், ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா? என்ற கேள்வியாம்...சே...சே... நம்ப நாட்டு வழக்கத்தையே ஒழிச்சிடுவானுக போலிருக்கே...!! தலைவிதி யில்லேன்னு வேறே சொல்றானுகளே... அடகருமமே! அம்பா பராசக்தி...! ஐயய்யோ அந்தப்பேரை சொன்னா எல்லாம் நம்மளையும் தி. மு. க. பிரியன்னு வேறே நினைச்சு தொலைச்சிடுவானுகளே! கணேசா...கிருஷ்ணா... ராமச்சந்திரா, ராமசாமி...அடசை...! எந்தப்பெயரை எடுத்தாலும் ஒரு சீர்திருத்த நடிகனாயிருக்கானே...!! சே...நமக்கு இனி நாட்டிலே வேலையில்லாமே ஆக்கிடுவான்கள் போலிருக்கே! எந்தக்காலத்திலே ஐயா பார்த்தோம் அண்ணாத்துரையையும், கருணாநிதியையும் தி. மு. க. தலைவர்களையும் மகாநாட்டையும் படத்திலே காண்பிச்சதை!! எல்லாம் நம்ம தலைவிதி...நம்ம உண்டாக்கின அந்தவிதி இனி நமக்குதான் பிரயோஜனப்படும் போலே இருக்கு! சீக்கிரமா மேலிடத்துக்கு தந்தி அடிக்கணும்......

ஒரு உண்மை ரசிகர்:-

படம் என்றால் இப்படி இருக்கணும் சார்! கருணாநிதி வசனம் பாருங்கள் கடைசியிலே கணே

சன் பேசும்போது சும்மா தீப் பொறி பறக்கிறது! எவ்வளவு கருத்துக்கள் இருக்கு தெரியுமா? பராசக்தி கணேசன் சும்மா நடிப்பிலே முன்னேறிக்கொண்டே இருக்கிறார்...என். எஸ். கிருஷ்ணன் வரும்போதெல்லாம் கருத்துக்களைத் தெளித்து கைதட்டுதல்களை அனுயாசமாய் தட்டிக் கொண்டு போய்விடுகிறார் ஸார்ன்னு! அவர் பாடுகிறதீனு... மூனு...காசு..., பணத்தை எங்கே தேடுவேன் என்ற பாடல்கள் கொட்டகை இடிந்து விடும்படியான கைதட்டலைக் கிளப்பிவிடுகிறது!! பற்றுதகுறை சிரிக்க வைக்க சி எஸ். பாண்டியனும், 'சிங்காரி' திக்குவாயர் தங்கவேலுவும் இருக்கவே இருக்கிறார்கள். பாரதிதாசன் பாடல் "பசியென்று வந்தால்" அதைப் படத்திலே கேட்டுத்தான் சார் ரசிக்கணும்!! கண்ணதாசன்,பாடல்களை சும்மா "ஜமாவா" அமைச்சிருக்கார். விஸ்வநாதன்-ராமமூர்த்தி பார்ட்டி மியூசிக்கிலே வெளுத்துக்கட்டியிருக்கிறார்கள். டைரக்ஷன் டெக்னிக்கை ஆரம்பத்திலேயே காட்டியிருக்கார் ஸார்! போய் பாருங்கள். நீங்கள் கருப்பும் சிவப்புமாக இல்லாட்டா கட்சி கண் கொண்டு பார்க்காதீங்க! உண்மையிலேயே ருசித்தாலும் வெளியே வந்து 'ருசிக்கலே'ன்னு தான் சொல்லத்தோணும்!!

பக்கத்து வீட்டு பங்கஜம் அடுத்த வீட்டு அலமேலுவிடம்:-

ஏண்டி கேட்டியா சேதி! பராசக்தி ஒருநாஸ்திகப் படம்என்று நினைச்சிண்டிருந்தா பக்கத்து துணையா 'பணம்' வேறே வந்து சேர்ந்திருக்காம். எங்க ஆத்துக்காரர் சொன்னார்...ஒரே கழகப் பிரசாரமாம்...கண் கொண்டு பார்க்க முடியலையாம்...ஆனா படம் நல்லாயிருக்குன்னு எங்கிட்ட ரகசியமா சொன்னாரு! அவரு சொன்னதா வெளிய தெரியப்படாதே! பத்மினியும், டி. ஏ. மதுரமும் நல்லா நடிச்சிருக்காங்களாம்! என்னமோ சுசீலாவாம்...! ஒவ்வொரு படத்திலேயா பழகிண்டேவர்ராளாம்!! நடிப்பை வீசை விலைக்கு கேட்கிராளாம்!! என்.எஸ் கிருஷ்ணன் ரொம்பநல்லா நடிச்சிருக்காராம்! அவருக்குத் தெரியாம ஆபீசுக்கு போனப்புறம்'மாட்னி'பார்த்துட்டு வந்துடலாம்...! யாரும் கேட்டா நீயும் படம் பாடாவதின்னு சொல்லு...என்ன புரிஞ்சுதா...?

நான் சொல்கிறேன்:-

'பணம்' படத்தை அவசியம் சென்று பாருங்கள். ஒருதடவை மட்டுமல்ல! பலதடவை பாருங்கள்! ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு புதுக்கருத்து புலப்படும்!! கலைக் கண்கொண்டு எதையும் பாருங்கள்! பிறகுசீர்தூக்குங்கள் சீர்திருத்தம் புலப்படும்! புரையோடிப்போன புண்களில் எத்தனை 'ஆப்ரேஷன்' செய்யப்பட்டிருக்கின்றன தெரியுமா 'பண'த்திலே! சென்றுபாருங்கள்புரியும்.

ஞாபக சோதனைப் போட்டி 10

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 31–1–53

சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினுல் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1 ப — —
2 — — — ணி
3 த — ம — — —
4 — — — லீலா
5 கிருஷ்ண — — — —
6 — — — — பரிணயம்
7 — — — — த்தி —
8 மா — — தி
9 — — — — ணி
10 — ரு — கோ — ர — க —

பெயர்..

விலாசம்..

ஊர்.. ஜில்லா.......................................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால், இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும் தேவையானவை ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனுல் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன்வீதம் எழுதப்படவேண்டும்.

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 31–1–53க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

5 உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

ஞாபக சோதனைப் போட்டி 9 முடிவு

சரியான விடை

1 சிங்காரி
2 மாரியம்மன்
3 வித்யாபதி
4 அபலை
5 வேணுகானம்
6 பிரேமபந்தன்
7 ராமநாம மகிமை
8 உண்மையின் வெற்றி
9 சியாமளா
10 பசியின் கொடுமை

முதற்பரிசு (2தப்புள்ள விடை) ரு 1—6—0 வீதம்

1 S. இஞ்ஞாசிமுத்து, 111, R. C. வடக்குத் தெரு, சாத்தூர்.
2 S. மனோகரன் c/o S. K. சகாதேவ நாடார், விருதுநகர்.
3 இ. ப. அசோகன், தமிழ்நாடு சினிமா ரசிகர்கள் சங்கம்,
42-44, லட்சுமிபுரம், 6வது தெரு, மதுரை.
4 N. J. ரத்தினம் c/o A. T. S. கந்தசாமி,
8/3, சாயக்காரர் தெரு, விருதுநகர்.

2வது பரிசு (3 தப்புள்ள விடை)
(அணா 8 விலையுள்ள புத்தகங்கள் அனுப்பப்படும்)

1 K. S. பார்த்தசாரதி, 71, மேட்டுத் தெரு, கும்பகோணம்.
2 P. பழனிச்சாமி, சந்திரசேகர விலாஸ் வாட்ச் கம்பெனி,
விருதுநகர்.
3 ரா. நடராஜன் s/o ராமகிருஷ்ண நாடார், ஏழாயிரம்பண்ணை.
4 P. சுப்பிரமணியன், அம்பிகா விலாஸ் கிளப்,
கச்சேரி ரோடு, விருதுநகர்.
5 L. பழனியப்பன், 30/9, பழைய ராமகிருஷ்ணபுரம், திருப்பூர்.
6 S. மகாலிங்கம் c/o P. S. ரத்தினசாமி நாடார்,
முனிஸிபல் ஆபீஸ் ரோடு, விருதுநகர்.
7 S. இராமானுசம், குல்லலக்குண்டு, (Via) கொடைரோடு.
மதுரை ஜில்லா
8 S. தங்கசாமி, c/o Sv. K. S. S. R. பராசக்தி விலாஸ்
சுருட்டு பாக்டரி, விருதுநகர்.
9 E. P. தயாநிதி, ராஜன் பப்ளிஸிட்டி,
44, லக்ஷ்மிபுரம், 6வது தெரு, மதுரை.

நேயர் தபால்



கல்லூரி மாணவர்கள் கவனத்திற்கு!

வெளியூர்களிலிருந்து ரயிலில் வந்துபோகும் கல்லூரி மாணவர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும் மற்ற பிரயாணிகளுக்கு செய்யும் சேவைகள் (?) என்றும் மறக்க முடியாதது. வருங்காலத்தில் நவ இந்தியாவை நிர்வகிக்கப் போகும்இவர்கள் இவ்வளவு அறிவாளிகளாயிருப்பது(?) யாரையும் திகைக்கவைக்கும். ரயில் புறப்பட்டபின் ஓடிப்போய் ஏறுவது, அதேமாதிரி நிற்குமுன் இறங்குவது, அது சமயம் வழியில் உள்ள பிரயாணிகளை தள்ளி இடித்துக் கொண்டு இடைஞ்சல் செய்வது. அதிலும் அவர்கள் ஏறியுள்ள வண்டியில் யாரும் பெண்கள் இருந்துவிட்டாலோ நம் மாணவர்கள் பேச்சையும்,கொம்மாளத்தையும் கேட்கவேண்டாம்.

8—10—52 மாலை நிர். 9. திருவனந்தபுரம் ரயில் வண்டி மதுரையைவிட்டுப்புறப்பட்டது ஒரு கும்பல் மாணவர்கள் அதே ரயிலில் L. T. 229 பிரேக் வண்டியில் ஏறியவர்கள் அரசியல்அரட்டை அடித்துக்கொண்டும் மற்றும் பரிபாசையில் அநேகம் பேசிக்கொண்டும் திருமங்கலம் வரைவந்து இறங்கும் பொழுது அவ்வண்டியில் உள்ள பிரேக் சக்கரத்தை நன்றாகத் திருகி விட்டு இறங்கி விட்டார்கள். வண்டியும் புறப்பட்டது. சக்கரத்தில் ஓர் வித சத்தம் உண்டாகி வந்தது. யாரும் கவனிக்கவில்லை. ரயில் கள்ளிக்குடி தாண்டி கொக்கலான்சேரி வரும்பொழுது ஓர்விதஎண்ணெய் நாற்றத்துடன் புகையும் கிளம்பியது. உடனே அடுத்த வண்டியில் இருந்த கார்டு டிரைவருக்கு அறிக்கை செய்து வண்டியை நிறுத்திபார்த்ததில்சக்கரத்துடன் உராய்ந்துவரும் பிரேக்கில் நெருப்பு பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. நல்லவேளையாக பிரேக் நன்றாகப் பிடிக்கவில்லை. பிடித்திருந்தால், கடைசி வண்டியும், பிரேக் வண்டியும், அதில் உள்ள பிரயாணிகளும் என்ன கதியாகி யிருப்பார்களோ? எவ்வளவு பெரிய அபாயம் நேரிடும். இவையெல்லாம் நம் மாணவர்கள் கற்பனைக்கு எட்டவில்லையா? நம் சகோதர மாணவர்கள் கற்பனையை நல்லவழியில் உபயோகப்படுத்துவார்களாக.

M. கிருஷ்ணம்மாள்-ராசபாளையம்.

பொங்கல் திருநாள் வாழ்த்து.

ஆசிரியப்பா.

அங்கயல் கண்ணியின் அருட்கடைப் பார்வை
தங்கிய வுலகினில் தனக்கிணை யில்லாப்
பாரத கண்டம் படைத்தநல் லரசால்
ஏரது கொண்டே யிரும்புவி திருத்தப்
பூவில் மழைமிகப் பொழிந்து செழித்தே
தாவில் தானியம் தழைத்தே உயிர்கள்
எண்ணிய எண்ணியாங் கெய்தியே வாழியே!
புண்ணியர் போற்றும் பொலிவுது பொங்கல்
சொக்கலிங்கத் தூயவன் அருளால்
மிக்க நற்றிருநாள் விளங்கி வாழியவே!

செந்தமிழ் நாட்டுச் ஸ்தாபிதம்: 1926

செல்வச் சிறுவர் சிறுமிகளுக்குத் திடகாத்திரமளிக்கும் சிறந்தஉணவு எங்கள் ராஜாபார்லி பிஸ்கட்

நினைவில் சதாநிலை நிற்கும் மணம், ருசி, இவைகளில் மனம் லயிக்கும் குழந்தைகளுக்குசிறந்தஆகாரம் ராஜாபார்லி பிஸ்கட்

எமது சாத்வீக உணவு நிலையத்தில் தூய நவீன இன்சுவை முறையில் உற்பத்தியாகிப் பல்லாண்டுகளாகப் பரத கண்டத்திலும் வெளி நாடுகளிலும் குழந்தைகள் முதல் முதியோர் வரையிலும் உள்ள மக்களுக்கு உடல் வன்மையும், உற்சாகமும், இன்சுவையும் அளித்துவருகிற ரொட்டி, பிஸ்கட், கேக்கு *ராஜா பார்லி* முதலிய இன்சுவை உணவுகளை ஆதரித்து வருகிற அன்பார்ந்த வியாபாரிகளுக்கும், அன்பர்களுக்கும் அன்புடைமையும், நன்றியுடைமையும் அறிவித்து வாழ்த்துகின்றோம்.

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ், மதுரை.

CONNEMARA PUBLIC LIBRARY
1955

மகிழ்ச்சி நாட்குறிப்பு

1984
நந்தன — தை

1953
ஜனவரி—பிப்ரவரி

ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
தை 1உ தைப் பொங்கல்	தை 2உ மாட்டுப் பொங்கல்		1 ஜனவரி 14	2 ● அமா 15	3 16	4 17
5 18	6 19	7 20	8 21	9 22	10 23	11 ★ கார்த். 24
12 25	13 26	14 27	15 28	16 ○ பௌர் 29	17 30	18 31
19 பிப்ரவரி 1	20 2	21 3	22 4	23 5	24 6	25 7
26 8	27 9	28 10	29 11	ஜனவரி 24உ சர்க்கார் விடுமுறை	ஜனவரி 26உ இந்திய குடியரசு தினம்	ஜனவரி 30உ காந்தி மறைந்த நாள்

Regd. No. M. 5483. MAHILCHI Jan-Feb. 53.

காரம், குணம், மணம் நிறைந்தது
எங்கும் எப்பொழுதும் கிடைப்பது

பீடி சக்கரவர்த்தி

தூ. பி. சொக்கலால் ராம்சேட் பீடி

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

தூ. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,
முக்கூடல் P. O. (திருநெல்வேலி ஜில்லா.)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் கா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.